Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, MARCH 19, 2022

சனிக்கிழமை மார்ச் 19, 2022 | ஒளி: 07 கதிர்: 260 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free

## விருது விழா



இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் நடத்தும், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான விருது வழங்கும் விழா, கொழும்பு ஹில்டன் ஹோட்டலில், மார்ச் 22 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொரோனா நெருக்கடி காரணமாக பிற்போடப்பட்டிருந்த வருடாந்த விருது விழா, சுகாதார வழிகாட்டலின் கீழ், அன்றையதினம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் அறிவித்துள்ளது. தொடர்ச்சி P2

# "புத்தாண்டுக்கு பொருட்கள் வாங்கவே சென்றேன்"

### இந்தியாவிலிருந்து திரும்பிய பசில் தெரிவித்தார்

■ டி.கே.ஜி.கபில்

அண்மையில் வரவிருக்கும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் சகல அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக, இந்தியாவால் கடனாக வழங்கப்பட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை பயன்படுத்த முடியும் என, நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷ, தனது விஜயத்தை முடித்துக்கொண்டு, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, நேற்றுப் பிற்பகல் 1.40 மணியளவில் நாடு திரும்பினார். இதன்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ச்சி P2





அர்ப்பணிப்பையும் தியாகத்தையும்

## ஆட்சியாளர் ஆரம்பிக்க வேண்டும்

### சஜித் தெரிவிப்பு: 'தயாராயிருங்கள்' என்கிறார்

'தயாராயிருங்கள்' என்பது சாரணர் இயக்கத்தின் பிரதான கருப்பொருளாகும் என்றும் அது என்றென்றும் பொருந்தக்கூடிய நித்திய தர்மம் போன்றது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். வாழ்க்கையில் எல்லாவற்றுக்கும் தயாராக இருப்பது மிகவும் அவசியம் என தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர், அந்த தயார் நிலையின் மூலம் வாழ்க்கை மற்றும் தொடர்ச்சி P2



## ஜனாதிபதி செயலகத்தில் இரு தடவைகள் பதற்றம்...

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, நேற்று (18) இரண்டு தடவைகள் பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டது.
அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் நேற்று (18) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைய முயற்சித்தது. எனினும், அதில் கலந்துகொண்டவர்கள் செயலகத்துக்குள்ளே நுழையவில்லை.
இந்நிலையில், ஜே.வி.பியுடன் இணைந்த சோசலிச இளைஞர் சங்கம் ஜனாதிபதி செயலக வளாகத்துக்குள் நுழைந்து, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததுடன் எதிர்ப்பு கூட்டமொன்றை நடத்தினர். இதனால் பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டது.

## மோட்டார் சைக்கிள் சவாரி இடைநடுவில் இடைநிறுத்தம்

### விரிவான விளக்கம் அளித்தது பொலிஸ்

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த மோட்டார் சைக்கிள் சவாரி, இடைநடுவிலேயே இடைநிறுத்தப்பட்டது. இந்தச் சவாரி, மீரிகமவில் ஆரம்பிக்கப்பட்டு, கற்பிட்டி ஊடாக, அநுராதபுரத்தைச் சென்றடையவிருந்தது.

போயா தினமான நேற்று முன்தினம் (17) ஆரம்பிக்கப்பட்ட சவாரி, அநுராதபுரத்தை இன்று (19) சனிக்கிழமை சென்றடைவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தொடர்ச்சி P2





## மோடிக்கு செந்தில் நன்றி நவின்றார்

இந்தியாவிடம் இருந்து, இலங்கைக்கு ஒரு பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை கடனாக பெறுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதன் ஊடாக, இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார சுமைகள் ஓரளவு குறையுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## புது ஆயுதங்களுடன் உலாவும் புதுப்படை

நாட்டில் நடக்கும் சம்பவங்களை பார்க்குமிடத்து, நாடு எங்கு சென்று கொண்டிருக்கின்றது என்பதே தெரியாமல் இருக்கின்றது. தொடர்ச்சி P2





ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவர்

## ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சு

ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவரும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதம செயலாளருமான ஜே ஷா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில், நேற்று (18) நடைபெற்றது. தொடர்ச்சி P2

## தங்கம் எகிறியது



இலங்கையில் தங்கத்தின் விலை கிடுகிடுவென அதிகரித்து கொண்டே செல்கின்றது. தங்கத்தின் விலையில் நேற்றும் ஏற்றம் ஏற்பட்டதாக, கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள தங்கக்கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். தொடர்ச்சி P2

## இந்திய மீனவர்கள் அறுவர் விடுதலை

■ செந்தூரன் பிரதீபன்

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 6 பேரும் விடுவிக்கப்பட்டனர். தொடர்ச்சி P2

## வாரத்தின் இறுதியில் வரிசைகள் கலையும்

### எதிர்பார்க்கிறது இ.பெ.கூ: ஞாயிறு டீசல் வருகிறது

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருளுக்கான நெருக்கடியை அடுத்து, எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் மக்கள் வரிசையாக நிற்கின்றனர். வாகனங்களின் வரிசையும் நீண்டுகொண்டே போகின்றது. இந்நிலையில், விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ள இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம், வரிசைகள், வார இறுதியுடன் முடிவிற்கு வருமென எதிர்பார்த்துள்ளதாக அறிவித்துள்ளது. தொடர்ச்சி P2





## ஆள்வைத்து தந்தையை வெட்டிக் கொன்ற மகன்

### கூலிக்காரனும் மகனும் கைது

■ கனகராசா சரவணன்

கூலிக்கு ஆள்வைத்து, தனது தந்தையையே மகன் வெட்டிக் கொலைச் செய்த சம்பவம், மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தை அடுத்து, கொலைச் செய்த கூலிக்கு அமர்த்தப்பட்ட 21 வயதானவரும், படுகொலை செய்யப்பட்டவரின் 22 வயதான மகனும் வியாழக்கிழமை (17) கைது செய்யப்பட்டனர். கொலை செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது என விசாரணைகளில் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார். கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள ஈரலக்குளம், குடாவெட்டி வயல் பகுதியில் வேளாண்மை காவலுக்காக அமைக்கப்பட்ட கொட்டகையில் இருந்து விவசாயியான 54 வயதான பரசுராமன் ஆறுமுகம் சடலமாக மீட்கப்பட்டார். தொடர்ச்சி P2

## மண்ணெண்ணெய்க்காக நின்று மயங்கி, சுருண்டு விழுந்த பெண்

எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்காக எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வரிசைகள் நாளுக்கு நாள் நீண்டு கொண்டே போகின்றன. ஒவ்வொன்றும் தனித்தனி வரிசைகள், வகையாகப்பிரிக்கப்பட்டுள்ளன.

வாகனங்கள் ஒருபக்கத்தில், மறுபுறத்தில் கேன்களுடன் பொதுமக்கள், மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள் மற்றுமொரு பக்கத்தில், தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# ஆட்சியாளர் ஆரம்பிக்க வேண்டும்

எதிர்கால சவால்களை சமாளிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட சாரணர் தலைமையகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது.

சாரணர் தலைமையகத்தில் சிறார்களின் நலனுக்காக மடிக்கணினி ஒன்றை அன்பளிப்புச் செய்ததுடன் சாரணர் இயக்கத்தின் கருப்பொருளான 'தயாராயிருங்கள்' என்ற தொனிப்பொருளில் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றினார்.

**அக்குரஸ்ஸையில்...**

இந்நிலையில், அக்குரஸ்ஸ போபிடிய விமலவங்ச கனிஷ்ட வித்தியாலத்திற்கு 8 இலட்சத்துக்கு 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான டிஜிட்டல் கணினி திரைகள் மற்றும் கணினி உபகரணங்கள் உள்ளடங்கலான ஸ்மார்ட் வகுப்பறையொன்றை நிர்மாணிக்கும் பிரபஞ்சம் வேலைத்திட்டத்தில் நேற்று (18) ஆரம்பிக்கப்பட்டது.

அர்ப்பணிப்பின் மூலம் முன்னுதாரணத்தை வழங்க வேண்டியவர் ஆட்சியாளர். அதற்கு மாற்றமாக மக்களிடம் அர்ப்பணிப்பை எதிர்பார்ப்பதை எதிருந்தாலும் வேண்டி நிற்கக்கூடாது என்றார்.

டிஜிட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பமும் அத்துறை சார்ந்த வேலைத்திட்டங்களும் இந்நாடு முகம் கொடுக்கும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஒரு வழியாகுமென எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவின் பிரகாரம் இயங்கிவருகின்ற பிரபஞ்சம் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் பல கட்டங்களாக நடைபெற்று வருகின்றது.

பிரபஞ்சம் வேலைத்திட்டம் மிக முக்கியமான, காலத்திற்கு பொருந்தக்கூடிய நாட்டிற்கு மதிப்பை பெற்றுத் தரும் அறிவார்ந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு உறுதுணையாக அமையக்கூடிய நடைமுறை சாத்தியமான ஒரு வேலைத்திட்டமாகும் என தெரிவித்த அவர், ஜனநாயக எதிர்க்கட்சியொன்று நாட்டை அபிவிருத்தியடையச்செய்யும் வேலைத்திட்டங்களை செயல்படுத்துவதை வரலாற்றில் எங்கும் இதுவரை காலமும் காண முடியாது இருந்தது என்றார்.

தற்போதைய அரசாங்கத்தின் கையாலாகாத தனம், ஆணவம், நயவஞ்சகத் தனத்தினால் இன்று நாடு அழிவுறும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. நாட்டின் டொலர் கையிருப்பு பாதாளத்திற்குள் விழும் அளவிற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

ஒரு மோசமான தீய சுழற்சி வளையம் உருவாகியுள்ளது. வரிச் சலுகை காரணமாக வரி வருவாய் குறைந்துள்ளது. ஒரு நாடாக எமக்கு சர்வதேச மூலதன சந்தைக்குச் சென்று டொலர்களை குறைந்த வட்டிக்கு கடன் வாங்க முடியாது என்றார்.

இச்சூழ்நிலையில் எரிபொருள் கொள்வனவு செய்ய டொலர் கையிருப்பிலில்லை. எரிபொருள் இல்லாத போது மின் துண்டிக்கப்படுகிறது. போது தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் குறைவடைகின்றன. அதனால், நம் நாட்டில் ஏற்றுமதி பொருட்களின் உற்பத்தி குறைவடைகிறது. இதன் தாக்கம், ஏற்றுமதி சந்தையில் காணப்படும் கேள்விக்கு உற்பத்திப் பொருட்களை உரிய நேரத்தில் வழங்க முடியாமல் தாக்கத்தைச் செலுத்தும் ஏற்றார்.

ஏற்றுமதி வீழ்ச்சி அடையும் போது டொலர் பற்றாக்குறை ஏற்படும். இங்குதான் மிக மோசமான தீய சுழற்சி காணப்படுகிறது. இந்த மோசமான தீய சுழற்சியானது இந்த நாட்டின் விஷ சுழற்சியாக மாறியுள்ளது என்று தெரிவித்த அவர், அதனை தீர்க்கவேண்டுமாயின், அர்ப்பணிப்பு, தியாகம் என்பது ஆட்சியாளரிடமிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆட்சியாளர்கள் முன்மாதிரியான மனிதர்களாக மாற வேண்டும் என்றார்.

# "புத்தாண்டுக்கு பொருட்கள் வாங்கவே சென்றேன்"

"இந்தியாவினால் வழங்கப்பட்ட 1 பில்லியன் அமெரிக்க டொலரை, இன்று (நேற்று) முதல் பயன்படுத்த முடியும்" என்றார்.

இந்த கடன் தொடர்பில் நிதியமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். வெளிப்படைத் தன்மையுடன், இதுவரையிலும் இறக்குமதிச் செய்த இறக்குமதியாளர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, மிகவிரைவாக பொருட்களை இறக்குமதிச் செய்து, சாதாரண விலைக்கு பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சொன்னார்.

இலங்கையுடன் இந்தியா எப்போதும் நட்புறவுடன் இருந்து வருகிறது. ஆனால் பிரதமர் மோடி இந்த முறை இன்னும் சிறப்பான ஒத்துழைப்பை நல்கினார் எனத் தெரிவித்த பசில் ராஜபக்ஷ, நேரடியாகவும் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் இலங்கைக்கு தேவையான உதவிகளை இந்திய வழங்குகின்றது என்றார்.

# மோட்டார் சைக்கிள் சவாரி இடைநடுவில் இடைநிறுத்தம்

மீரிகமவில் சவாரி ஆரம்பிக்கப்பட்டு, மாதம்பை ஊடாக பயணித்துக்கொண்டிருந்த போது மக்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். "நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு, மோட்டார் சவாரிக்கு மட்டும் எரிபொருள் உண்டா", என்பது பிரதான விமர்சனமாக இருந்தது.

அதுமட்டுமன்றி, வீதியின் இருமருங்குகளிலும் இருந்தவர்கள் அரசாங்கத்தை கடுமையாகத தூற்றினர். இந்த மோட்டார் சைக்கிள் சவாரிக்குப் பின்னால், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவே இருக்கின்றார் என்றக் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன. இந்த சவாரி தொடர்பிலான விமர்சனங்களும் கேலி, கிண்டல்களும் சமூக வலைத்தளங்களில் தூள் கிளப்பின.

இதேவேளை, மாதம்பையை கடந்து தலுவ சந்தியை மோட்டார் சவாரி, பயணித்துக்கொண்டிருந்த போது, கறுப்பு கொடியொன்றை கையில் ஏந்தியிருந்த மீகெட்டுவத்தே சுமித்த தேரரும் வீதியை மறித்து தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். அவருடன் இருந்தவர்களும் தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டமையால், அந்த மோட்டார் சவாரி இடைநடுவில் கைவிடப்பட்டது. அத்துடன் பொலிஸாருக்கு எதிராகவும் கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அந்த மோட்டார் சவாரியில், அதிக வலுகொண்ட மோட்டார் சைக்கிள்கள், சொகுசு வாகனங்கள், அந்த சவாரிக்கு இடையிடையே பயணித்த என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பில் பொலிஸ் திணைக்களம் நேற்று (18) விடுத்திருந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, Spin Rider club தனியார் மோட்டார் சமாஜயத்தின் ஊடாக மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு நிதியுதவி மற்றும் கற்பிட்டி பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கல் வேலைத்திட்டத்துக்கு சமாந்தரமாக, மோட்டார் சைக்கிள் சவாரி, போயா தினமான (17 ஆம்திகதியிலிருந்து 19 ஆம் திகதி வரையிலும் நடத்துவதற்கு அனுமதி கோரப்பட்டிருந்தது.

மீரிகமவில் இருந்து கற்பிட்டி ஊடாக அனுராதபுரம் வரையில் அந்த மோட்டார் சைக்கிள் சவாரியை நடத்துவதற்கு பொலிஸில் அனுமதி கோரப்பட்டிருந்து.

பதிவு செய்யப்பட்ட தனியார் அமைப்பு மற்றும் சமூக சேவை தொடர்பில் சட்டரீதியாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, உரிய நிபந்தனைகளின் கீழ், அரச கட்டணம் அறவிடப்பட்டதன் பின்னர் அதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளை செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்ட, அரச அல்லது தனியாருக்கான சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டால் ஏற்பாட்டாளர் குழு, அதற்கான நட்டஈட்டை வழங்கவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

பொலிஸ் மோட்டார் சைக்கிள் மற்றும் அதிகாரிகளுக்கு அறவிடவேண்டிய அரச கட்டணம் அறவிடப்பட்டு, மோட்டார் சைக்கிள் சவாரி பயணிக்கும் வீதிகளில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குச் செய்யப்பட்டது. ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் ஏதும் மீறியிருந்தால், அதற்காக, சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கம் எகிறியது

நேற்றைய நிலவரப்படி, 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை ஒரு இலட்சத்து 60,000 ரூபாவாகும். அதேபோல, 2 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை ஒரு இலட்சத்து 48,000 ரூபாவாகும். ஐக்கிய அமெரிக்க டொலர் இன்மையால் நாட்டுக்குள் தங்கத்துக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் தங்கக்கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

> **உலகச் சந்தையில் தங்கத்தின் விலை, ஒரு அவுன்ஸ் 2000 அமெரிக்க டொலரை அண்மித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

அதுமட்டுமன்றி, உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கு இடையிலான யுத்தமும், தங்கத்தின் விலை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். உலகச் சந்தையில் தங்கத்தின் விலை, ஒரு அவுன்ஸ் 2000 அமெரிக்க டொலரை அண்மித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# புது ஆயுதங்களுடன் உலாவும்...

மீரிகமவில் இருந்து கற்பிட்டி ஊடாக அனுராதபுரம் வரையிலும் நடத்தப்படவிருந்த மோட்டார் சைக்கிள் சவாரி பெரும் சர்ச்சையை கிளப்பியிருந்தது. மக்களின் கடுமையான எதிர்ப்பை அடுத்து, சவாரியின் அடுத்தக் கட்டமான கற்பிட்டியில் இருந்து அனுராதபுரம் வரைக்குமான சவாரி நிறுத்தப்பட்டது.

> **படத்தில் இருக்கும் மோட்டார் சைக்கிளும் உலாவுகின்றது. அந்தப் படம் எவ்விடத்தில் வைத்து பிடிக்கப்பட்டது என்ற தகவல் வெளியாகவில்லை.**

அதற்குப் பொலிஸ் தலைமையகத்தில் இருந்து விளக்கத்துடன் ஊடக அறிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது. இந்த சவாரியில் பயணித்தோர், பொலிஸார் விதித்திருந்த நிபந்தனைகளை மீறியிருந்தால் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், படத்தில் இருக்கும் மோட்டார் சைக்கிளும் உலாவுகின்றது. அந்தப் படம் எவ்விடத்தில் வைத்து பிடிக்கப்பட்டது என்ற தகவல் வெளியாகவில்லை. என்றாலும், WP (மேல் மாகாணம்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# விருது விழா

ஊடகவியலாளர்களுக்கான இந்த விருது வழங்கும் விழாவில், தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலான அச்சு ஊடகங்களிலும் தங்களுடைய திறமையை திறம்பட வெளிக்காட்டிய ஊடகவியலாளர்களுக்கு விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

குறிப்பு: 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான ஊடகவியலாளர் விருதுவிழாவின் போது, விருதுகள் அல்லது சான்றிதழ்களுக்காக, தமிழ்மிரர் பத்திரிகையில் இருந்து மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். எங்களுடைய பயணத்தில் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது பத்திரிகை, நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம். (ஆ-ர்)

# மோடிக்கு செந்தில்...

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்குவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதன் பிரகாரம் அதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவும் நட்புறவின் காரணமாக இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு இந்தியா உதவிகளை வழங்கி வருகிறது. எரிபொருள் கொள்வனவு, ஏனைய அத்தியாவசிய பொருளாதார தேவைகளுக்கு இந்த நிதியை அரசாங்கம் பயன்படுத்தும் என்றும் செந்தில் தொண்டமானின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடுமையான நெருக்கடியை சந்தித்துள்ள இந்தத் தருணத்தில் இலங்கைக்கு கைகொடுத்தமைக்காக இந்திய அரசிற்கு தனது நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர்கள் அறுவர் விடுதலை

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜெ.கஜநிதிபாலன் மீனவர்களை நேற்று (18) விடுவித்து, விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

மீனவர்களுக்கு பத்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அந்த மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நாட்டுப்படகு தொடர்பான வழக்கு விசாரணை, மே மாதம் 27ஆம் திகதிக்கு தவணை இடப்பட்டுள்ளது. நெடுந்தீவு கடற்பரப்புக்குள் பெப்ரவரி 18 ஆம் திகதியன்று நாட்டுப் படகுடன் நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டின் கீழ், குறித்த மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சு

ஆசிய கிரிக்கெட் சபையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக, ஜேஷா மற்றும் ஆசிய நாடுகளில் இருந்து 40 பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி எஷ்லி டி சில்வா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

# வாரத்தின் இறுதியில்...

"நாட்டிலுள்ள அனைத்து CEYPETCO எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருள் துரிதமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது" என கூட்டுத்தாபனத்தின் தலைவர் சட்டத்தரணி சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

தமக்குத் தேவையான எரிபொருளை மாத்திரம் பெற்றுக்கொள்ளுமாறும் மக்களை கேட்டுக்கொண்டுள்ள அவர், தேவையற்ற இடையூறுகளை விளைவிக்கவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டுக்குத் தேவையான எரிபொருளை உரிய நேரத்தில் இறக்குமதி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதால், மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் அவர் சொன்னார்.

எவ்வாறாயினும், நாட்டின் பல பகுதிகளில் மக்கள் நீண்ட வரிசையில் எரிபொருளுக்காக நேற்றும் காத்திருந்தனர். கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளிலும் வரிசை நீண்டுக்கொண்டே செல்கின்றது. டீசல், பெட்ரோல் மட்டுமன்றி, மண்ணெண்ணெய்க்கான வரிசையும் நீண்டுகொண்டே செல்கின்றது.

இந்நிலையில், 40,000 மெட்ரிக் தொன் டீசல் ஏற்றிய கப்பல், நாட்டை நாளை (20) அண்மிக்குமென தெரிவித்துள்ள எரிசக்தி அமைச்சின் செயலாளர் கே.டீ. ஆர் ஒல்கா, கப்பலில் கொண்டுவரப்பட்ட டீசலை எதிர்வரும் திங்கட்கிழமை தரை இறக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

# ஆள்வைத்து தந்தையை வெட்டிக்...

அவரது உடலில் வெட்டுக்காயங்கள் இருந்தன.

22 வயதான ஆண்ணொருவர் உட்பட, பெண் பிள்ளைகள் மூவரென, நான்கு பிள்ளைகளும் பரசுராமன் ஆறுமுகத்துக்கு உள்ளனர். மாட்டுப்பட்டிக்கு சொந்தமான இவர் விவசாயத்தையும் மேற்கொண்டு வருகின்றார் மதுவுக்கு அடிமையான மகன், தந்தையிடம் பணம் கேட்பதும், மாட்டுப்பட்டியிலுள்ள மாடுகளைத் திருடிவிற்றல் உள்ளிட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். இதனால், தந்தைக்கும் மகனுக்கும் இடையில் அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, தனக்கு இடையூராக இருக்கும் தந்தையை கொலைச் செய்ய தீர்மானித்த மகன், கிரான் பகுதியைச் சேர்ந்த தனது நண்பன் ஒருவனை, மார்ச் 1 ஆம் திகதியன்று சந்தித்து தனது தந்தையை கொலை செய்யுமாறும் அதற்காக, 50 ஆயிரம் ரூபாய் பணம்தருவதாக பேரம் பேசியுள்ளான். தொலைபேசில் பலமுறை தொடர்பு கொண்டு தந்தை கொலை தொடர்பாக வினாவியுள்ளான்.

நண்பனின் தந்தை கொட்டகைக்கு தனிமையில் சென்றிருப்பதை அறிந்த கூலிக்கு அமர்த்தப்பட்டவரும் சென்றுள்ளார். மகனின் நண்பனைக் கண்ட பரசுராமன் ஆறுமுகம், அவனை அழைத்து பேசிக்கொண்டிருந்துள்ளார். பின்னர், இருவரும் சேர்ந்து உணவு உண்டுள்ளனர். கச்சான வறுத்து சாப்பிட்டுள்ளனர். இருவரும் 1 மணியளவில் நித்திரை செய்துவிட்டனர். எனினும், அதிகாலை 3.30 மணியளவில் தான் எழும்பி பார்த்தபோது, பரசுராமன் ஆறுமுகம் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். அதன்பின்னர், அங்கிருந்த கல்லொன்றை எடுத்து தலையில் போட்டேன், அவர் உயிரிழக்கவில்லை. மறைத்துவைத்திருந்த கத்தியை எடுத்து கழுத்தை வெட்டினேன் உயிர் போகவே இல்லை. பின்னர், தனது இடுப்பிலிருந்த நாடாவை எடுத்து, அவரின் கழுத்தை இறுக்க நெரித்தேன். அவர் உயிரிழந்ததை அடுத்து, அங்கிருந்து அதிகாலை 4 மணியளவில் தப்பிச்சென்று, தனது நண்பனின் தொலைபேசிக்கு அழைப்பை எடுத்து, "நீ சொன்ன மாதிரி உனது அப்பாவை கொலை செய்துவிட்டேன்" என தெரிவித்துவிட்டு வீட்டுக்குச் சென்றுவிட்டேன் என வாக்குமூலமளித்துள்ளார்.

பேரம் பேசியவாறு பணத்தை கொடுப்பதற்காக,கிரானுக்கு கடந்த 14 ஆம் திகதி சென்றிருந்த மகன், அங்கிருந்து வந்தாறுமூலைக்கு மோட்டார் சைக்கிளில் வந்து, தங்க ஆபரணத்தை அடகுவைத்து, 50 ஆயிரம் ரூபாவை கொடுத்துள்ளார். அதன்பின்னர், இருவரும் பிரிந்துச் சென்றுள்ளனர்.

கொலைக்கு பயன்படுத்திய கத்தி, கல் மற்றும் நாடா என்பன மீட்கப்பட்டன. அதன்பின்னர் சந்தேகத்தின் பேரில், அவருடைய மகன் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே ஏனையோர் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# மண்ணெண்ணெய்க்காக நின்று மயங்கி...

பாரிய பௌசர்களை ஏற்றிக்கொண்டு வந்திருக்கும் வாகனங்களும் வரிசையில் காத்துக்கிடக்கின்றன.

இன்னும் சில எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு முன்பாக இரவிரவாக மக்கள் காத்துக்கிடக்கின்றனர். சில நிலையங்களில் மக்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. கைகலப்பாகவும் மாறியுள்ளது.

இவ்வாறான நிலையில் கொழும்பு ஒருகொடவத்தை பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றின் ஒரு பக்கத்தில், மண்ணெண்ணெயை கொள்வனவு செய்வதற்காக, மக்கள் வரிசையில் நின்றிருந்தனர். இந்த வரிசை சுமார் இரண்டு கிலோமீற்றர் வரையிலும் நீண்டு சென்றுக்கொண்டே இருந்தது.

மண்ணெண்ணெயைக் கொள்வனவுச் செய்வதற்காக சென்று, நீண்ட நேரம் காத்திருந்த பெண்ணொருவர், மயங்கி சுருண்டு விழுந்துவிட்டார். அந்த வரிசையில் நின்றுகொண்டிருந்தவர்கள் அப்பெண்ணுக்கு உதவிச் செய்தனர். இந்த புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

எரிபொருள் அடங்கிய கப்பல்கள் வந்துவிட்டன. இன்னும் சில நாட்களில் தீர்வு காணப்படுவிடும். மக்கள் வரிசையில் நிற்கவேண்டிய நிலைமை ஏற்படாது. என்றெல்லாம் அறிவிப்புகள் விடுக்கப்பட்டாலும். வரிசை நீண்டுக்கொண்டே செல்கின்றது என்பது மட்டுமே உண்மையாகும்.



# ஆபத்தில் கைகொடுக்கும் தோழன்



ச.சேகர்
sekar2584@gmail.com



இலங்கை அந்நியச் செலாவணி இருப்பு நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், கடந்த காலங்களைப் போன்று, 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான கடன் உதவியை வழங்க அண்டை நாடான இந்தியா முன்வந்திருந்தது. இந்த கடனைப் பெறுவதற்கான உடன்படிக்கையில் இரு தரப்பினரும் கைச்சாத்திட்டிருந்தமை பற்றி பரவலாக பேசப்பட்டது.

குறிப்பாக இந்தக் கடன் உதவி கிடைத்தமை தொடர்பில் பல தரப்பிடமிருந்தும் பலவிதமான கருத்துகள் வெளிப்பட்டிருந்தன. குறிப்பாக, எவ்விதமான பிரதியுபகாரமுமின்றி இந்த உதவி வழங்கப்பட்டிருக்காது, நாட்டின் ஏதேனும் ஒரு பகுதி அல்லது வளம் இதற்கு பிரதியீடாக இந்தியாவுக்கு வழங்கப்பட்டிருக்கும் போன்றவாறான கருத்துகளும் இதில் அடங்கியிருந்தன.

நாட்டில் பெரும்பாலும் சகல அத்தியாவசியப் பொருட்களும் தட்டுப்பாடு, பதுக்கல், கறுப்பு சந்தை தோற்றுவிக்கப்பட்டு, மக்கள் நாளாந்த உயிர் வாழ்வதற்கு அவசியமான நுகர்வுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு கூட நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய ஒரு நெருக்கடி நிலை உருவாகியுள்ள நிலையில், மக்களின் இந்தப் பிரச்சினைகள் எனக்குத் தெரியும், இருந்தாலும் இந்தப் பிரச்சினைகள நான் பொறுப்பாளியல்ல எனக்கூறிவிட்டு, என் மீது நம்பிக்கை வைத்து, நீங்களே என்னை இந்தப் பதவிக்கு கொண்டு வந்தீர்கள். அதனால் என் மீது தொடர்ந்தும் நம்பிக்கை வையுங்கள் என பதவியேற்றதன் பின்னர் நாட்டு மக்களுக்கு ஐந்தாவது தடவையாக உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ புதன் கிழமை குறிப்பிட்டிருந்தார்.

## தேவையான இரண்டில் ஒன்று கிடைத்தது

தமது உரையில் கணக்கு வழக்குப் பற்றி சர்வசாதாரணமாக பில்லியன்களில் வருமானம் மற்றும் செலவு பற்றிக் குறிப்பிட்டு, இறுதியில் பற்றாக்குறை 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அமைந்திருக்கும் என மதிப்பிட்டுள்ளதாகச் சொன்னார். அந்த 2 பில்லியனில் ஒன்றைத் தானே எம் அண்டை நாடு கடன் உதவியாக வழங்க கைச்சாத்திட்டுள்ளது. அப்படியாயின், ஜனாதிபதி அவர்களின் கூட்டிக் கழித்தல் கணக்குப் படி நாட்டின் இந்த நெருக்கடிகள் நீங்குவதற்கு தேவையாக அமைந்திருப்பது இன்னொரு 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தானே.

## அத்தியாவசிய பொருட்களுக்கே கடன் உதவி

உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் கொள்வனவுக்காக இந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கையில் நிலவும் நெருக்கடிக்கான குறுங்காலத் தீர்வாக அமைந்துள்ளதாக இந்தியா தரப்பில் இந்த உதவி பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களில் பெரும்பாலானவை இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படுகின்றன. குறிப்பாக அத்தியாவசிய உணவு, மருந்துப் பொருட்கள் இந்தியாவிலிருந்து வருகின்றன. எனவே, இந்த கடன் உதவித் திட்டத்தினூடாக உண்மையில் இலங்கைக்கு பொருத்தமற்ற அல்லது ஏற்புடையதற்ற கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டிய நிலை இருக்காது.

## தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கம்

தெற்காசிய பிராந்தியத்தில் பொருளாதார ரீதியில் வலுப்பெற்ற நாடாக இந்தியா திகழ்கின்றது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. குறிப்பாக கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக உலக நாடுகள் வரிசையில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட, அதிகளவு உயிரிழப்புகள் பதிவாகியிருந்த, பெருமளவு பொது முடக்கத்துக்கு நீண்ட காலப்பகுதிக்கு முகங்கொடுத்த நாடுகள் வரிசையில் இந்தியா முன்னிலையில் திகழ்ந்த போதிலும், இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு, வெளிநாட்டுக் கொள்கை போன்றன உறுதியான நிலையில் பேணப்பட்டிருந்தன.

கடந்த சில மாதங்களாக இலங்கை அந்நியச் செலாவணி இருப்பு தொடர்பான நெருக்கடிக்கு முகங்கொடுத்து வரும் நிலையில், சார்க் வசதியின் கீழ் இலங்கைக்கு எரிபொருள் கொள்வனவுக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், நாணய கைமாற்று அடிப்படையில் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்கியிருந்தது. ஏசியன் கிளியரிங் யூனியன் காரணமாக 515 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவையும் மீளப் பெறுவதை ஒத்தி வைத்திருந்தது.

## இந்திய சுற்றுலாப் பயணிகளை கவரத் திட்டம்

இலங்கையில் காணப்படும் இராமாயண கால தொல் பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை பிரச்சாரப்படுத்துவது, குஜராத் அடங்கலாக இந்தியாவில் பௌத்தர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இலங்கை பற்றிய பிரச்சாரங்களை மேம்படுத்தி, இலங்கைக்கு இந்தியாவிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டில் இலங்கை மற்றும் குஜராத் மாநிலத்துக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை பின்பற்றி இந்த பிரசாரப் பணிகளை இந்தியா முழுவதிலும் முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேதன உரப் பயன்பாடு பற்றியும் பேச்சு

இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு பல தரப்பினர் மத்தியிலும் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்த சேதன விவசாய முறை தொடர்பிலும் இலங்கை நிதி அமைச்சருக்கும் இந்தியப் பிரதமருக்குமிடையிலான உரையாடலின் போது பேசப்பட்டிருந்தது. இதன் போது, சேதன உரப் பயன்பாட்டின் அனுகூலங்கள் பற்றி இந்தியப் பிரதமர் குறிப்பிட்டிருந்ததுடன், அதற்கான நுட்பங்கள் மற்றும் தயாரிப்புகள் போன்றவற்றில் இந்தியா கொண்டுள்ள அனுபவம் பற்றியும் விளக்கமளித்திருந்தார். இதில் இலங்கைக்கு பொருத்தமானதாக அமையக்கூடிய நெனோ-உரங்கள் பற்றியும் பேசப்பட்டிருந்தது.

## மீனவர் பிரச்சினை

நீண்ட காலமாக நிலவும் கடல் எல்லை மீனவப் பிரச்சினை தொடர்பிலும் இந்தியப் பிரதமர் மற்றும் இலங்கை நிதி அமைச்சர் ஆகியோர் கலந்துரையாடியிருந்தனர். குறிப்பாக கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களை மனித நேயத்துடன் நடத்துவது, அவர்களின் வாழ்வாதாரம், கடல் வளம் மற்றும் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை விரைவில் விடுவிப்பது தொடர்பிலும் பேசப்பட்டிருந்தது. இந்தச் சிக்கல் நிறைந்த பிரச்சினை தொடர்பில் அவசரமாக நீண்ட காலத் தீர்வொன்றை காண வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் இரு தரப்பினரும் பேசியிருந்தனர்.

இந்நிலையில் இலங்கைக்கு 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி வழங்கியமை தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையில், 'இலங்கையின் நட்புறவான மக்களுக்கு தொடர்ந்தும் கைகொடுப்போம்' என குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையான நண்பனை ஆபத்தில் அறியலாம் என்பதற்கு ஓர் உதாரணமாக இந்தியாவால் இந்த 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதை குறிப்பிட முடியும்.

---

### இலங்கை:

# அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டம் நீக்கப்பட வேண்டும்



மதுரி தமிழ்மாறன்,
தேசிய சட்ட ஆலோசகர்,
சர்வதேச ஜூரிகள் ஆணையம், இலங்கை



சுமார் 180 ஆண்டுகளுக்கு முன் அலைந்து திரிவோர் எனும் கருத்தினை, பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் இலங்கையில் அறிமுகம் செய்தனர். பொருளாதார ரீதியில் பின்னடைவடைந்த சமூகங்களின் வாழ்வாதாரம் தொடர்பான பழக்கவழக்கங்களை, இதன் மூலம் அவர்கள் குற்றமாக வரையறுத்தனர். உதாரணமாக, பிச்சையெடுத்தல், உடல் ஊனம், ஒரு நோயை வெளிப்படுத்தல் மற்றும் வீடின்றி வாழ்தல். இவை அக்கால பிரித்தானிய சமூக வழக்கங்களுக்கு எதிரானவையாக கருதப்பட்டன.

காலனித்துவ காலங்களில், கடின வேளைகளில் இருந்து தப்பித்து (குறிப்பாக பெருந்தோட்டத்துறையில்) வதிவிடமற்ற நிலையில் காணப்பட்டு, அரசின் கண்களில் பிரயோஜனமற்றவர்களாக கருதப்பட்டவர்களை கைது செய்ய அலைந்து திரிவோர் சட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இந்தச் சட்டங்கள் இலங்கையின் அரசியலமைப்பால் மற்றும் சர்வதேச மனித உரிமை சட்டங்களால் உறுதிப்படுத்தப்பட்ட மனித உரிமைகளுக்கு முரணானவை. அதன் அமல்படுத்தலும் தன்னிச்சையாகவும் பாரபட்சமுள்ளதாயும் மற்றும் துஸ்பிரயோகம் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது.

நவீன சமூகத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத காலனித்துவ விழுமியங்களை பிரதிபலிக்கும் இலங்கையின் அலைந்து திரிவோர் சட்டம் 1841ஆம் ஆண்டு முதல் மாற்றமடையாது காணப்படுகின்றது. அண்மையில், சர்வதேச ஜூரிகள் ஆணையம் இலங்கையின் அலைந்து திரிவோர் சட்டத்தை நீக்க வேண்டியதன் அவசியம் குறித்ததொரு சட்ட சுருக்கத்தை வெளியிட்டது. இந்தச் சுருக்கம், சட்டத்தில் காணப்படும் பிரச்சினைகளை இனம்காண்பதோடு இந்தச் சட்டம் எவ்வாறு மனித உரிமைகளை மீறும் விதத்தில் அமல்படுத்தப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

'ஒழுக்கமான நடத்தை' என்பதைக் கட்டுப்படுத்தும், 'கலவரம் செய்தல் மற்றும் ஒழுங்கற்ற விதத்தில் செயற்படுதல்', 'அலைந்து திரிதல்', 'தரித்திருத்தல்', 'பொய்யாக பாசாங்கின் பேரில் ஆயுதம் சேர்த்தல்', 'காயங்கள், ஊனம், குஷ்டரோக நோய் அல்லது வேறு அருவருப்பான நோய்களை வெளிப்படுத்த முயல்தல்', 'பணம் கேட்டல்' அல்லது 'ஒழுக்கமற்ற செயல்கள்' போன்ற சில சமூக நடத்தைகளை தண்டனைக்கு உட்படுத்துவதாகவும் இந்தக் கட்டளைச்சட்டம் காணப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோர், 'கயவர்களாக', 'அலைந்து திரிவோராக' அல்லது 'திருத்த முடியாத கயவர்களாக' கருதப்படுகின்றனர். 'திருத்த முடியாத கயவர்கள்' அவர்கள் செய்த 'குற்றத்துக்கு' தண்டிக்கப்படுவது மட்டுமல்லாது, அவர்களின் எதிர்கால நன்னடத்தைக்கு உறுதியளிக்கும் விதத்தில் ஒரு வருடத்துக்கான பணப் பாதுகாப்பு தொகையை வழங்கவும் எதிர்பாக்கப்படுகின்றது.

ஏற்கெனவே இந்தச் சட்டத்தில் காணப்படும் துஸ்பிரயோகத்திற்கு மேலாக இந்தச் சட்டம், தொடர்ச்சியாக திருநர்கள், பாலியல் தொழிலாளர்கள், பொது இடங்களில் கைகள் கோர்த்த நபர்களைக் கூட அதை ஒரு 'குற்றமாக கூறி' கைது செய்ய தவறாக பயன்படுத்தப்படுகின்றது.

பொது சேவை அதிகாரிகள், குறிப்பாக பொலிஸார், சட்ட வரையறைகளை பிழையாக விளங்கிக்கொண்டு, ஒழுக்க விழுமியங்களை கட்டுப்படுத்த சட்டங்களை அமல்படுத்துகின்றனர். மேற்கூறப்பட்ட எதுவும் இலங்கை சட்டத்தின் கீழ் குற்றங்கள் அல்ல. உண்மையில், பாலியல் தொழிலாளர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்காக அல்ல, 'கலவரம் செய்யும் வகையில், பொது வீதிகளில் அல்லது பெருந்தெருக்களில் ஒழுங்கீனமாக' நடந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் மட்டுமே அவர்களை கைது செய்யலாம் என இலங்கையின் நீதிமன்ற தீர்ப்புகள் கூறியுள்ளன. 2017ஆம் ஆண்டு, பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதற்கான, ஐக்கிய நாடுகளின் குழு, இலங்கையில் பொலிஸார் அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தை 'பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களை, அவர்கள் ஆணுறைகள் வைத்திருப்பதை பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்கான ஆதாரமாக பாவித்து, தன்னிச்சையாக கைது செய்து, அவர்களை துன்புறுத்துவது, பாலியல் லஞ்சம் கோருவது மற்றும் மிரட்டி பணம் பெறுவது' போன்ற செயற்பாடுகளில் ஈடுவடுவதை கண்டனம் செய்தது.

இந்தக் கட்டளைச் சட்டத்தின் படி, குற்றம் செய்த பெண்கள் நீதிமன்றத்தின் விருப்பத்தின் அல்லது கட்டளையின் பேரில் 1907ஆம் ஆண்டின் இலக்கம் 5, தடுப்பு இல்ல கட்டளைச் சட்டத்தின் கீழுள்ள தடுப்பு இல்லமொன்றிற்கு சிறைத்தண்டனைக்கு பதிலாக அனுப்பப்படலாம். எனினும் வழக்கமாக, குற்றவியல் நீதிமன்றங்களால் மெத்செவன தடுப்பு இல்லத்திற்கு (காணப்படும் ஒரே இல்லம்) அனுப்பப்படும் பெண் குற்றவாளிகள், அங்கேயே பல ஆண்டுகளாக சிறை போன்ற சூழலில், எவ்வித சட்ட பிரதிநிதத்துவமும் இன்றி மற்றும் விடுதலைக்கான வழிகள் இன்றி நலிவடைந்து காணப்படுகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் தன்னிச்சையான கைதுகளுக்கான சேர்குழுவால் எடுத்துக்காட்டப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட பெண் 1975ஆம் ஆண்டு முதல் தடுப்பு இல்லத்தில் இருந்து வருகிறார். சட்டத்தை தன்னிச்சையாகவும் பாரபட்சமாகவும் பயன்படுத்துவது, குற்றங்களை வரையறுப்பதில் காணப்படும் பழைமையான முறைகள் போன்றவற்றால் இந்தக் கட்டளைச் சட்டத்தை துரிதமாக நீக்குவது அவசியமாக உள்ளது.

அநேகமான முக்கிய மனித உரிமை சாசனங்கள், அதன் பின்னேற்பாடுகளை இலங்கை அரசு கைச்சாத்திட்டுள்ளது. இந்தச் சாசனங்கள் அனைத்தும் அரசுகள் மனித உரிமை சட்டங்களை அமல்படுத்தும் போது பாரபட்சமின்மை எனும் கொள்கையை பின்பற்றுவதை கோருகின்றன. பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளுக்கான குழு மற்றும் ஐக்கிய நாடுகளின் வீடமைப்பிற்கான விசேட அறிக்கையாளர், இருப்பிடமற்றவர்களை குற்றப்படுத்தல் அரசின் மனித உரிமை கட்டுப்பாடுகளுக்கு முரணானது என குறிப்பிட்டுள்ளனர்.

அவ்வாறு செய்வது சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் தன்னிச்சையான கைது மற்றும் தடுப்பிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமையை பாதுகாக்கும் அரசின் கடப்பாட்டிற்கும் முரணானது. ஏழை மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்களை இலக்கு வைக்கும் அலைந்து திரிவோர் சட்டங்கள், இந்தப் பாதுகாப்பை நிராகரிக்கிறது என்பதை இச்சமவாயத்தின் கீழான மனித உரிமைகள் குழு ஆமோதிக்கின்றது.

இந்தச் சட்டத்தின் அம்சங்கள் இலங்கை அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்படும் அடிப்படை உரிமைகளான சமத்துவத்திற்கான உரிமை, துன்புறுத்தல் அல்லது கொடூரமான மனிதநேயமற்ற நடத்தை, அவமானப்படுத்தும் நடத்தையில் இருந்து சுதந்திரம் மற்றும் தன்னிச்சையான கைது, தடுப்பு, தண்டனையில் இருந்து பாதுகாப்பு போன்றவற்றுக்கு முரணானது. எனினும் துரதிர்ஷ்டவசமாக அரசியலமைப்பின் 16ஆம் உறுப்புரை, அடிப்படை உரிமைகள் அத்தியாயத்துடன் இணங்காத போதும், ஏற்கெனவே காணப்படும் எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத சட்டங்களின் செல்லுபடியாகும் தன்மையை அனுமதிக்கின்றது. இது அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தின் தொடர்ச்சியான அமல்படுத்தலையும் அனுமதிக்கின்றது.

பாராளுமன்றம் உடனடியாக இந்தக் காலாவதியான காலனித்துவ சட்டத்தை நீக்க வேண்டும். தேவையேற்படின் தண்டனைச் சட்டக்கோவையை மறுபரிசீலனை செய்து அதில் தேவையற்றதாக காணப்படும் குறிப்பான சட்ட அம்சங்களை மாற்ற வேண்டும். அறிமுகப்படுத்தப்படும் புதிய சட்டங்கள் அனைத்தும் இலங்கையின், சர்வதேச மனித உரிமைகளுக்கான கடப்பாடுகளுடன் பொருந்துபவையாக இருக்க வேண்டும். அநேகமான அப்பாவிகள் முக்கியமாக பெண்கள், தன்பாலீர்ப்புள்ள பெண்கள், ஆண்கள், இருபாலீர்ப்புடைய நபர்கள், திருநர்கள், இடைஇலிங்கத்தவர் சமூகத்தை சேர்ந்த நபர்கள் பல ஆண்டுகளாக இந்த தெளிவற்ற சட்டத்தின் தன்னிச்சையான அமல்படுத்தலின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சட்டம் கால தாமதமின்றி துரிதமாக நீக்கப்பட வேண்டும்.

இன்று சிறுவர்கள் பாதிக்கப்படுவது

# வளமான எதிர்காலத்தின் அழிவுக்கான சமிக்ஞை

## சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள மாகாண ஆணையாளர் நிஸ்வாணி

ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com





கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம், 'விழித்தெழுந்த சமுதாயத்தில் சம அந்தஸ்துள்ள, மகிழ்ச்சியான, அச்சமற்ற குழந்தைகளைக் காணுதல்' என்பதைத் தொலைநோக்காகக் கொண்டு இயங்கி வருவதாக தெரிவிக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் சிறுவர் நலன்களும் சிறுவர் பாதிப்பின் தன்மைகளும் எவ்வாறுள்ளன என்பதுபற்றி, சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளர் ஆர். நிஸ்வாணி 'தமிழ் மிரர்' வாசகர்களுடன் பகர்ந்து கொள்கிறார்.

சிறார்களே எதிர்காலத்தின் மனித வளமும் இந்தத் தேசத்தின் தலைமைகளும் என்கின்ற வகையில், சிறார்களுக்கு வளமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், சிறுவர் நன்னடத்தை திணைக்களம் அதி கூடிய அக்கறையை எடுத்து வருவதாக நிஸ்வாணி தெரிவிக்கிறார்.

அநாதைகள், ஆதவற்ற சிறுவர்கள் கைவிடப்பட்ட சிறுவர்கள் ஆகிய தரப்பினரின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் செய்து வருகின்ற சிறுவர் நன்னடத்தை திணைக்களம், திருகோணமலையில் தலைமைக் காரியாலத்தையும், கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் 13 உப காரியாலயங்களையும் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இதனூடாக கிழக்கு மாகாணத்தில் உள்ள 53 சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் 1,274 சிறுவர்கள் பராமரிக்கப்படுகின்றனர். இவர்களில் 753 பேர் சிறுமிகளாவர்.

இதில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 31 இல்லங்களில் 875 சிறுவர்களில் 485 பேர் சிறுமிகள் ஆவார். இவர்களில் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம் காணப்படுகின்றனர். இது கிழக்கு மாகாணத்தில் ஏனைய இரு மாவட்டங்களோடும் ஒப்பிடுகையில் மிக அதிக எண்ணிக்கையாகும்.

அதேபோன்று, அம்பாறை மாவட்டத்திலுள்ள எட்டு சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் 122 சிறுமிகளும் 41 ஆண் சிறுவர்களும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள 14 சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் 146 சிறுமிகளும் 90 ஆண் சிறுவர்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

பொதுவாக, சிறுவர்கள் வெளி நபர்களால் பாதிக்கப்படுவதை விட, தமது குடும்ப உறவுகளால்தான் கூடுதலாக பாதிக்கப்படுகின்றார்கள் என்பது கண்டறியப்பட்டு உள்ளது.

இந்த விடயத்தில், பெண் பிள்ளைகளுக்கு சரியான வழிகாட்டல் தேவைப்படுகின்றது. கல்வி அறிவு மட்டும் போதாது; சமூகம் எப்படியான இயல்பைக் கொண்டிருக்கின்றது என்கின்ற நடைமுறை அறிவை, அவர்களுக்கு ஊட்ட வேண்டும். இதனூடாக நல்லது- கெட்டதைப் பிரித்தறியும் அறிவு கிடைக்கப்பெறும்.

இளம் வயதினர் குறிப்பாக, பெண் பிள்ளைகள் எல்லோரையும் எளிதில் நம்பி ஏமாந்து விடுகின்றார்கள். வீட்டுச் சூழலில் அன்பு, அரவணைப்பு கிடைக்காததால் வெளி இடத்தில் இருந்து கிடைக்கும் அன்பை அவர்கள் நம்பத் தொடங்குகிறார்கள்.

பெற்றோரின் அன்பும் ஆதரவும் அரவணைப்பும் நன்றாகவே குறைந்துவிட்ட தற்போதைய காலகட்டத்தில், குடும்பங்கள் சிறியதாக மாறியிருக்கின்றன. கூட்டுக் குடும்ப அமைப்பு முறையும் தற்போதைக்கு இல்லை. ஈர்ப்பு, கவர்ச்சி என்று வெளி இடங்களில் இருந்து வருவதை எதிர்பார்க்கும் ஒரு சூழ்நிலையில் கிடைக்கக் கூடிய அன்பும் அரவணைப்பும் பெரிதாகத் தெரிகின்றது.

பாதிக்கப்பட்டு எங்களிடம் வருபவர்களில் 70 சதவீத பிள்ளைகளுக்கு பெற்றோர் இருக்கிறார்கள். பெற்றோர் தங்களுக்குள் முரண்பட்டுப் பிரிந்து சென்று, வேறு திருமணம் செய்து கொள்வதால், பிள்ளைகள் நிர்க்கதியாகிய நிலையில், போக்கிடமின்றி எம்மிடம் வருகின்றார்கள்.

முரண்பாடுகள் காரணமாக பெற்றோர் பிரிந்து போனாலும் அவர்கள் தங்களது பிள்ளைகளைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

அனுமதி கோரி என்னிடம் வரும் கடிதங்களை கூர்ந்து கவனிக்கும் பொழுது, பெற்றோர் பிரிவு, தாய் வேறொரு திருமணம், அதேபோல் தந்தை வேறொரு திருமணம்; பிள்ளையை எங்களால் பராமரிக்க முடியாது போன்ற காரணங்களே அவற்றில் சொல்லப்பட்டிருக்கும்.

தாய் சொல்லக் கூடிய காரணங்களில், எனது இரண்டாவது கணவருடன் பிள்ளையைப் பராமரிக்க முடியாது. அதேபோன்று தந்தை சொல்லக் கூடிய காரணம், நான் முடித்திருக்கும் இரண்டாவது மனைவியால் முதல் மனைவியின் பிள்ளையைப் பராமரிக்க முடியாது என்பதாகக் கூறியிருப்பார்கள். இந்தக் காரணங்களைச் சொல்லி, தாயோ தந்தையோ அவர்கள் தங்களது பொறுப்பில் இருந்து நழுவிச் செல்கின்றார்கள்.

இந்த இடத்தில் வயோதிபர்களான பாட்டி, பாட்டனாரால் சிறுவர்களைப் பராமரித்துப் பாதுகாக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. நிர்க்கதியானவர் பெண் பிள்ளையாக இருந்தால், அந்தப் பிள்ளையை சமூகம் பார்க்கும் விதம் வித்தியாசமாக இருக்கும். ஆண் பிள்ளையாக இருந்தால் அவன் சமூகத்தில் வேறொரு சீர்கேடான வழி நடத்தலைத் தேர்ந்தெடுக்கக் கூடிய வாய்ப்புள்ளது.

பெற்றோர் இருந்து, அவர்கள் பராமரிப்பு இல்லங்களை நாடுகிறார்கள் என்று சொன்னால், அந்தக் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள பிளவுகள்தான் அதற்குக் காரணம்.

முதிர்ச்சியின்றி இளவயதுத் திருமணம் செய்து கொண்டு, ஒன்றோ இரண்டோ பிள்ளைகளுடன் பெற்றோர் இளவதிலேயே பிரிந்து சென்று, மறுதிருமணம் செய்து கொள்ளும்போது, அவர்களது மூத்த பிள்ளை வயது வந்த நிலையை எட்டிப் பிடித்திருக்கும்.

கடந்த சில வருடங்களில் பதிவான விவரங்களோடு ஒப்பிடும்போது, சிறுவர் துஷ்பிரயோகங்கள் கூடிக் கொண்டே இருக்கின்றன. கொரோனா வைரஸ் தொற்றினால் பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததால் வீட்டிலேயே பிள்ளைகள் அடைபட்டுக் கிடந்ததும் இதற்கு ஒரு காரணமாகும். துஷ்பிரயோகமும் போதைப் பொருளுக்கு அடிமையாவதும் இந்தச் சந்தர்ப்பங்களில் அதிகரித்திருக்கிறது.

இப்பொழுது எல்லா நிர்வாகக் கட்டமைப்புகளிலும் சிறுவர் நலன் சார்ந்த அலுவலர்கள் பிரிவுகள் இயங்குகின்றன. உதாரணத்துக்கு பொலிஸ் நிலையத்தில் சிறுவர் பெண்கள் பிரிவு இயங்குகிறது. அவ்வாறே பிரதேச செயலகத்திலும் வைத்தியசாலையிலும் கூட இப்பிரிவு இயங்குகிறது. இவர்கள் அனைவரும் மாதத்தில் ஒரு தடவையாவது ஒன்று கூடி எடுத்த முடிவை சரிபார்ப்பதிலும் அதனை அமல்படுத்துவதிலும் தொடர்ச்சியான வழிமுறையைக் கையாண்டால், சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களைக் குறைப்பதோடு முன்னேற்றங்களையும் அடைந்து கொள்ளலாம். அதேவேளை, வருமுன் காப்போம் என்ற அடிப்படையில் நாங்கள் முற்காப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றோம். தகவல்களை அடிப்படையாக வைத்து குடும்ப தரிசிப்பு, சூழல், வாழ்வாதார நிலைமை என்பனவற்றை நோட்டமிட்டு உதவு ஊக்க செயற்பாடுகளில் இணைப்பை ஏற்படுத்துவோம். சுய தொழிலும் இதில் உள்ளடங்கும். நெருக்கடியிலுள்ள பிள்ளைக்கு கல்விக்காக மாதாந்தம் ஆயிரம் ரூபாய் உதவு தொகை வழங்கும் ஏற்பாடுகளும் உள்ளன. உண்மையில், இந்தத் தொகை போதாது. இதனை மூவாயிரமாக அதிகரிக்க வேண்டும் என்ற வேண்டுகோள் ஆளுநரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் 18 வயதுவரை சிறுவர்களைப் பராமரிக்க முடியும். ஆனால் ஆதரவற்ற நிலையில் 18 வயதையும் கடந்து பல்வேறுபட்ட காரணங்களுக்காக உதவி நாடுவோரையும் நாம் பராமரிக்க வேண்டித்தான் இருக்கிறது. உயர்கல்வி, தொழில்வாய்ப்புகள், வாழ்க்கை என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுக்கவும் வேண்டியுள்ளது. பிள்ளைகளின் நலன் கருதி வயதை நாங்கள் ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை.

சிறுவர் நலன் சார்ந்த ஏதாவது விடயங்களை தெரிவிக்க விரும்புவோர் என்னையும் மாவட்டத்திலுள்ள சிறுவர் நன்னடத்தைப் பிரிவையும் தொடர்பு கொள்ளலாம். திருகோணமலை உட்துறைமுக வீதியில் எமது மாகாண தலைமைக் காரியாலயம் அமைந்துள்ளது. தொடர்பு விவரம்: 026-4931287, 026-2222773, e-mail: probation@ep.gov.lk

சிறுவர்களுக்குரிய அங்கிகரிக்கப்பட்ட பல்வேறான உரிமைகள் இருக்கின்றன. பொதுவாக தமது பிள்ளைகளுக்குரிய உரிமைகள்பற்றி பெற்றோர்கள் குறைந்தளவிலேயே அறிந்து வைத்துள்ளனர். தங்களுடைய பிள்ளைகளின் தேவைகள்பற்றி கவனிப்பதற்கும் அவர்களுடன் மனம்விட்டுக் கலந்து பேசுவதற்கும் அவர்கள் மீது அன்பு செலுத்துவதற்கும் நேரம் இல்லை. இதனால் பிள்ளைகள் தங்களுடைய பல விடயங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாமலும் குமுறுகின்றனர்.

பெற்றோர்களுக்கும் சிறுவர்களுக்குமிடையிலான இடைவெளி அதிகரிப்பதன் மூலமாகப் பிள்ளைகளுக்கு விரக்திநிலை ஏற்படுகிறது. இதனால் சிறுவர்களுடைய உள வளர்ச்சியிலும் திறன் விருத்தியிலும் பாதிப்பு ஏற்படுகின்றது.

வறுமை, நெறிபிறழ்வான பழக்கவழக்கங்கள், போதைப்பாவனை, அடிப்படை வசதிகள் கிடைக்காமை என்பனவும் சிறுவர்கள் உடல், உள ரீதியில் ஆரோக்கியமாக வளரும் நிலையை மிகவும் பாதித்து வருகிறது.

சிறுவர்கள் அனுபவிக்க வேண்டிய மகிழ்ச்சி, விளையாட்டு வசதி, பெற்றோர்களின் அரவணைப்பு எல்லாமே இந்தச் சிறார்களில் அனேகமானோருக்கு எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றது. இவற்றைச் சீர்செய்வது பற்றிச் சிந்திப்பது அவசியமும் அவசரமுமாகும்.



# "தமிழ் மொழி என்பது ஆதி மொழி; சிங்கள மொழி தனித்துவமான மொழி"

## கிழக்கு மாகாண ஆளுநர்



அ . அச்சுதன்
husseinmedia000@gmail.com

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தால் திருகோணமலை மாவட்டத்தில் கடந்த இரண்டாண்டுகள் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தை வலியுறுத்தி பல வேலைத்திட்டங்களை சிறப்பாக முன் எடுத்துள்ளமை பாராட்டப்பட்டு வருகின்றது.

இதன் பயனாளிகளாக அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றியம், திருகோணமலை மாவட்ட பெண்கள் சமாசம், இளையோர் அமைப்புகள், மாற்றுத்திறனாளிகள் அமைப்பு போன்றவற்றின் உறுப்பினர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரத்தை வலியுறுத்தி மாவட்ட பிரதேச அரசியல் பிரமுகர்களுடனான கலந்துரையாடல்களில் பல பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் கிராமங்களில் இனங்காணப்பட்ட மக்கள் பிரச்சினைகளையும் கிராமம் சார்ந்து குழுக்களாக பிரிக்கப்பட்டு பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

மாவட்டத்தின் திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச சபையில் உள்ளடங்கும் கணேஸ் லேன் பகுதியில் அடையாளப் படுத்தப்பட்ட பிரச்சினையினை இல்முனிஸா வழங்கினார். அங்கு சுமார் 35 வருட காலமாக கிராமத்தின் உள் வீதிகள் புனரமைக்கப்படவில்லை என்றும் அதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அத்துடன் இங்கு உள்ள கிராம மகளிர் அபிவிருத்திச் சங்க பொது கட்டடம் நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

மனையாவெளிக் கிராமம் சார்ந்த பிரச்சினைகளை கௌசிகா முன்வைத்திருந்தார் அதில், மாவட்ட ரீதியில் முக்கியப்படுத்தப்பட்ட பிரச்சினையாக, விசேட தேவையுடையவர்களின் பிரச்சினையைச் சுட்டிக்காட்டியிருந்தார். பிரதேச செயலகம், பஸ் தரிப்பிடம் போன்ற பொது இடங்களில் அவர்களுக்கான அணுகும் வசதிகள் இல்லையெனவும் எதிர்வரும் காலங்களில் பாதைகள், பொது கட்டடங்கள் அமைக்கும் போது, விசேட தேவையுடையோரை உள்வாங்கி செயற்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்தார்.

கப்பல் துறை பிரதேசத்தின் பிரச்சினைகளை அக் கிராமம் சார்ந்து சுதர்சினி தெரியப்படுத்தினார். தமது குடியிருப்புக் காணிகளுக்கான காணி அத்தாட்சிப் பத்திரம் இல்லாததால் சுயதொழில் வாய்ப்புகளை முன்னெடுப்பதிலும் வீட்டுத்தோட்டம் போன்றவற்றை முன்னெடுக்கமுடியாத நிலையில் உள்ளது எனவும் இப்பகுதியில் குடிநீர் வேலைத்திட்டம் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை எனவும் கப்பல் துறை பிராந்திய வைத்தியசாலையில் இரவு-பகல் கடமை புரியக்கூடிய வைத்தியரொருவரும் அவசரப்பிரிவு வாகனமும் அவசியம் வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை மூதூர் பிரதேச கிராம மட்டம் சார்ந்த பிரச்சினைகளில் முக்கிய பிரச்சினைகளை ந. நிறோஜா முன்வைத்தார். குறிப்பாக, பள்ளிக்குடியிருப்பு - மல்லிகைத்தீவுக்கான பொதுப் போக்குவரத்து இன்மையால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர் என்றார்.

கிண்ணியா பிரதேச பிரச்சினைகள் சார்ந்து பரிதா கருத்து தெரிவிக்கையில், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறுகைத்தொழில் முயற்சிக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்பை ஏற்படுத்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார்.

தம்பலகாமம் பிரதேசத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவும் உரிய முறையில் வழங்கப்படுவதில்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டது. இது போன்று மாவட்டத்தின் பல பிரச்சினைகள் ஆராயப்பட்டு உரிய அரச அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மக்களின் பிரச்சனைகள் இனியாவது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

இந்த நிலையில், மக்களின் பிரச்சினைகளை விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் எடுத்துச் சென்றது.

"பொது மக்களுக்கு சேவை வழங்கும் அரச திணைக்களத்தின் சேவை பெறுபவர்களின் மொழிகளில் ஆவணங்களை வழங்குவதில் குறைபாடுகள் காணப்படுகிறது. இருப்பினும் சட்டரீதியாக தத்தமது மொழியில் உங்களுக்கான ஆவணங்களை பெற்றுக் கொள்வது, ஒவ்வொருவருடைய உரிமை" என கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்தார்.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் 'நல்லிணக்கத்தின் திறவுகோல் மொழியே' எனும் தொனிப் பொருளின்கீழ் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்டச் செயலக உதவி அரசாங்க அதிபர் எஸ். நிருபா, உதவி உள்ளூராட்சி ஆணையாளர் தென்னகோன், இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை மாவட்ட பிராந்திய முகாமையாளர் பிரபாகரன், சிறுவர் பெண்கள் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி சந்தியா, கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் தர்மசிறி, மாகாண சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் மோகனகுமார், மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய அலுவலக உத்தியோகத்தர் அருன் சிவஞானம், மூதூர், குச்சவெளி, தம்பலகாமம், திருகோணமலை பட்டணமும் சூழலும், சேருவில ஆகிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாதர் சங்கங்கள், அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றியம், திருகோணமலை மாவட்ட பெண்கள் சமாசம் பிரதிநிதிகள் இளையோர் அமைப்பு உள்ளிட்டோர்களுக்கு மொழியின் அவசியத்தை வலியுறுத்தும் கலந்துரையாடல் புதன்கிழமை (09-03-2022) திருகோணமலை ஜீப்லி மண்டபத்தில் நடைபெற்றபோது, முதன்மை அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், "மொழி தெரியாத போதும் எமது மானப்பாங்கில் ஒருமைப்பாடு இருந்தால் மற்றவர்களை நாம் புரிந்து கொள்ள முடியும். மொழி பெயர்ப்பாளர்கள் மூலம் அவர்களது கருத்துகளை தெரிந்து அவர்களின் மனங்களை வெல்ல முடியும். அவ்வாறு நான் கிழக்கு மாகாணத்தில் 02 வருடங்களாக பணியாற்றுகின்றேன். தமிழ் மொழி என்பது ஆதிமொழி; அதனை உலகில் உள்ள பல நாடுகளில் உள்ள மக்கள் பேசி வருகின்றனர். அதே நேரம் சிங்கள மொழி என்பது தனித்துவமான மொழியாகும். இது எமது நாட்டில் மாத்திரமே பேசப்படுகின்றது. இதனால் தனித்துவமான எமது நாட்டுக்குரிய மொழியையும் நாம் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

"எமது நாட்டில் இடம்பெறுகின்ற சில பிரச்சினைகளுக்கு மொழியும் ஒரு காரணமாக காணப்படுகின்றது. இதனால் சிங்கள மொழி பேசுவோர் தமிழையும் தமிழ்மொழி பேசுவோர் சிங்கள மொழியையும் கற்றுக் கொள்வோமாக இருந்தால், சில பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும். எனவே எமது நாட்டை முன்னோக்கி நகர்த்த மொழி ரீதியான முரண்பாடுகளை களைந்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்" என்றார்.

மக்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் அறிந்து அரச அதிகாரிகள் பணியக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர்.





# "முறையான அபிவிருத்தியை வேண்டுறோம்"



## முனைத்தீவு கிராம மக்கள்



வ. சக்திவேல்
shagthivel@gmail.com

"நான் இக்கிராமத்தில் முன்னர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக இருந்தபோது, சிறிய மழைக்கும் எமது கிராமம் காணப்படும் நிலைமை தொடர்பில், போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளரை அழைத்து வந்து காண்பித்தேன். எனவே, கிராமத்தில் மழைக்காலத்தில் தேங்கி நிற்கும் வெள்ள நீரை வெளியேற்றுவதற்கு, முறையான வடிகான் வசதி அமைக்கப்படல் வேண்டும் எனும் கோரிக்கையை பிரதேச செயலாளரிடம் நாம் முன்வைத்தோம். அதனை பிரதேச செயலாளரும் எற்றுக்கொண்டு, அதற்குரிய திட்டங்களை வடிவமைத்துள்ளார்கள். எனினும் அது இதுவரையில் நடைமுறைக்கு வரவில்லை.

"தற்போது கிராமத்தில் புதிதாக வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன. ஆனாலும் அந்த வீதிகளுக்குக்கு குறுக்காக குளாய்கள் அமையப்பெறாத காரணத்தால், வெள்ளநீர் வழிந்தோட முடியாத அளவிற்கு வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. திட்டமிடப்படாத அபிவிருத்திகளால்தான், இவ்வாறு மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். ஒரு வளவினுள் தேங்கியுள்ள நீரை வெளியேற்ற முயன்றால், அருகிலுள்ள ஏனைய வீடுகளுக்குள்ளும் அது பாய்கின்றது. இதனால் பல சமூக பிரச்சினைகளும் கிராமத்தில் தோன்றுகின்றன.



நா. சிவலிங்கம்

"இவ்வாறு மழைவிட்டாலும் நீர் தேங்கி நிற்பதால் குழந்தைகள் உள்ளிட்ட பலருக்கும் தொற்று நோய்களுக்கு உட்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது. கிராமத்தில் தேங்கிக்கிடக்கும் நீரை எவ்வாறாவது வெளியேற்ற வேண்டும் என மக்கள் மத்தியிலும் விட்டுக் கொடுக்கும் தன்மையும் இல்லாமலுள்ளது என தெரிவிக்கின்றார் முனைத்தீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் நா.சிவலிங்கம்.



க. கிருஷ்னகுமார்

"சிறிய மழை பெய்தாலும் நாம், எமது வீடுகளில் குடியிருக்க முடியாது. இது இன்று நேற்றல்ல; காலாகாலமாக இருந்து வருகின்றது. அதிகாரிகள் வந்து பார்த்து விட்டுச் செல்கின்றார்களே தவிர, எதையும் நடைமுறைப்படுத்துவதாக தெரியவில்லை. முறையான வடிகான்களை அமைத்தால், இவ்வாறு மழைநீர் மாதக்கணக்கில் தேங்கிக்கிடக்காது" என ஆதங்கப்படுகின்றார் க.கிருஷ்னகுமார்.

"எனக்கு தற்போது 30 வயதாகின்றது. எனது வயதுக்கு எட்டிய வகையிலும், எமது கிராமத்திலுள்ள பெரியோர்களின் கருத்துகளின் அடிப்படையிலும், கடந்த காலத்தில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் எமது முனைத்தீவுக் கிராமமும் ஒன்றாகும். இது அன்றுதொட்டு இன்று வரையில் அதே நிலைமையில்தான் காணப்படுகின்றது. எமது கிராமத்தில 60இற்கு மேற்பட்ட வீதிகள் உள்ளன. ஒரு லெட்சம் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எமது கிராமத்தில வெறுமனே 88 மீற்றர் வீதி மாத்திரம்தான் இரண்டு வருடத்தில் செப்பனிடப்பட்டுள்ளது. ஒருசில வீதிகளைத் தவிர ஏனைய வீதிகள் அனைத்தும் சேறும் சகதியுமாகத்தான் காணப்படுகின்றன. இதனால் பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், முதியவர்கள் என பலதரப்பட்டோரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றார்கள். தொடர்ச்சியாக நாம் இவ்வாறு வாழமுடியாது. எமது கிராமத்தில் மாற்றம் வரவேண்டும். வடிகான் வசதிகளை ஏற்படுத்தித்தர அரசியல் பேதங்களுக்கு அப்பால், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகள், அனைவரும் எமது கிராமத்திற்கு நேரடியாக வந்து, எமது மக்கள் படும் இன்னல்கைளைக் கண்ணுற்று, தேவைகளை முன்னுரிமைப்படுத்தி, திட்டமுன்மொழிவுகளை வடிவமைத்து, அவற்றை நிறைவேற்றித்தருவதற்கு, உடனடியாக முன்வர வேண்டும் என, எமது கிராம மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

"மேலும் பழம்பெரும் கிராமமான எமது கிராமத்தில், தற்போதைய நிலையில் 60இற்கு மேற்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளன. மற்றாக, பொற்றொழிலை மாத்திரம் நம்பி வாழும் எமது கிராம மக்கள், தற்கால சூழலில், பொற்றொழிலில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக, கிராமத்திலுள்ள அனைவரும் தத்தமது தொழில்களை இழந்த நிலையில் காணப்படுவது வேதனையளிக்கின்றது. இதனால் மக்கள் ஏனைய கூலி வேலைகளை நாடிச் செல்கின்றனர். எனவே அரசாங்கம் கிராம மட்டத்தில் ஏனைய வாழ்வாதார உதவித்திட்டங்களை நல்க முன்வரவேண்டும்.



தெ. புவிதாஸ்

"எமது கிராமத்தில் உபதபாலகம் அமைந்துள்ளது. அது தனியார் கட்டடத்தில்தான் இயங்கி வருகின்றது. எனவே, கிராமத்தில் அரச காணி இருந்தும் சிறியதொரு கூட்டம் நடத்துவதற்கும் கட்டட வசதி இல்லாமலுள்ளது. எனவே பொதுக்கட்டம் ஒன்று அமையப் பெறும் பட்சத்தில், அதில் கைத்தொழில் பயிற்சிகள், உபதபாலகம், கூட்டங்கள் கூடுதல் போன்றவற்றிக்கு உபயோகப்படுத்தலாம். இப்பகுதிக்குரிய ஆயுர்வேத வைத்தியசாலை எமது கிராமத்தில்தான் அமைந்துள்ளது. அதுபோல் அதையும் பொது நூலகத்தையும் தரமுயர்த்தப்படல் வேண்டும். ஒட்டு மொத்தமாக எமது கிராமம் அபிவிருத்தியை நோக்கிச் செல்லவேண்டும் என்பதுவே எமது கோரிக்கையாகும்" என எடுத்தியம்புகின்றார் முனைத்தீவு தென்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தெ. புவிதாஸ்.

மட்டக்களப்பு மாவட்டம், போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குபட்பட்ட முனைத்தீவு கிராம மக்கள் இவ்வாறு கருத்துத் தெரிவிகிக்கின்றனர்.

அபிவிருத்தியில், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வாழ்வாதாரம், உள்ளிட்ட பல விடயங்களையும், தொட்டுச் செல்லும் வகையில் சென்றால்தான் கிராமங்களும் எதிர்காலத்தில் நகரங்களாக மாற்றமடையும் எனலாம். காலத்திற்குக் காலம் அரசாங்கங்கள் மாறினாலும், கிராமங்கள் முதல் நகரங்கள் வரையிலான அபிவிருத்திச் செயற்பாடுகளில் அரசகொள்கையில் மாற்றமில்லாத நிலையான செயற்றிட்டங்கள் கற்றறிந்தோர் மட்டத்தில் தீட்டப்படல் வேண்டும். அவ்வப்போது பெய்யும் மழைக்கு





முளைக்கும் காளான்போல் மாறிமாறி அரசியல்வதிகள் உருவானாலும் முனைத்தீவு போன்ற கிராமங்களில் அபிவிருத்தி என்பது அம்மக்களுக்கு எட்டாக்கனியாகவே அமைந்து விடுகின்றன.

"எனது வட்டாரப்பிரிவுக்குள் முனைத்தீவு, பட்டாபுரம், பெரியபோரதீவு, புன்னக்குளம் ஆகிய நான்கு கிராமங்கள் உள்ளடங்குகின்றன. முனத்தீவுக் கிராமத்தில் வருடாந்தம் மழைக்காலத்தில இவ்வாறான நிலைமை வருவதாகத்தான் உள்ளது. எனினும் எமது பிரதேச சபையில் நிதிவளம் மிகவும் குறைவு. இருந்த போதிலும் நாம் முனைத்தீவில் வெள்ளநீர் தேங்கியுள்ள பகுதிகளை ஜே.சி.பி இயந்திரம் மூலம் வெட்டி அகற்றுவதற்கும், ஒரு வீதியில் குளாய் அமைத்து நீரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். திட்டங்கள் வரும்போது ஏனைய வடிகான் வசதிகளை மேற்கொள்ளவுள்ளோம். இருந்தபோதிலும் அரசாங்கத்தால் ஒரு பிரதேச சபை உறுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நான்கு மில்லியன் நிதியில் எமது வட்டாரத்திலுள்ள நான்கு கிராமங்களுக்கும் தலா 10 இலட்சம் வீதம் பகிர்ந்து அதில் வீதி மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல விடங்களை அபிவிருத்தி செய்வதற்கு திட்ட முன்மொழிவுகளை அனுப்பி வைத்துள்ளேன்" என அப்பகுதிக்குரிய போரதீவுப் பற்று பிரதேச சபை உறுப்பினர் ம.சுகிகரன் தெரிவித்தார்.



ம.சுகிகரன்

சுகிகரன் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கின்ற போதிலும், முனைத்தீவுக் கிராமத்தில் பல்கிப் பெருகியிருக்கின்ற மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு, சிறிய சிறிய ஒதுக்கீடுகள் 'யானைப் பசிக்கு சோளம் பொரி' போன்றுதான் உள்ளது. எனவே மக்களின் வரிப்பணத்தில் வேதனம் பெறும் அதிகாரிகளும் காலத்திற்குக் காலம் கைகூப்பி வாக்குப் பெறும் மக்கள் பிரதிநிதிகளும், முனைத்தீவு கிராமத்திலுள்ள தேவைகளைப் பகுப்பாய்வு செய்து ஒவ்வொன்றுக்கும் திட்ட வரைவுகளை இலங்கை அரசாங்கத்திடமும் வெளிநாடுகளின் தூதரகங்கள், புலம்பெயர் அமைப்புகள் போன்றவற்றை அணுகி, ஒவ்வொன்றாக நிவர்த்தி செய்து கொடுக்கப்படும் பட்சத்தில் அம்மக்கள் சொகுசு வாழ்கைக்கு வித்திடா விட்டாலும், ஓரளவு நிம்மத்திப் பெருமூச்சுடன் வாழ்வார்கள் என்பதுவே இக்கிராம மக்களின் அயராத எதிர்பார்ப்பார்ப்பாக உள்ளது.



# வளமுண்டு; வகையில்லை



சுப்பிரமணியம் பாஸ்கரன்

எது கிராமத்தில் வளமான மண்ணும் தண்ணீர் நிறைந்த குளமும் உள்ளன. போகத்தில் பயிர் செய்து, அதனை யானைகளின் அழிவில் இருந்து பாதுகாத்து, அறுவடை செய்து அதன் பலாபலன்களை அனுபவிப்பது என்பது, மிகக் கடினமான ஒன்றாகவே உள்ளது. இந்த யானைத் தொல்லைக்கு நிரந்தரமான ஒரு தீர்வை எவரும் பெற்றுத்தருவதாக இல்லை என்பது, முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்கு உட்பட்ட தென்னியன்குளம் கிராமத்தில் வசித்து வரும் விவசாயிகளின் பெரும் குறையாக உள்ளது.

வன்னியின் பெருமளவான பகுதிகள் வளமான மண் வளத்தையும் நீர்வளத்தையும் கொண்ட பகுதிகளாகும். இவ்வாறான பகுதிகளில் வாழ்ந்த மக்கள், விவசாய ரீதியில் முன்னேற்றம் கண்டவர்களாகவே முன்னைய காலங்களில் திகழ்ந்தனர். தற்போது நெற்செய்கை தவிர்ந்த ஏனைய விவசாய நடவடிக்கைகளை பெரும்பாலானர்கள் கைவிட்டுள்ளனர். அதாவது விவசாய உற்பத்திகளுக்கு உரிய விலைகள் இடைக்காமை, காட்டுயானைகள், குரங்குகள் என்பவற்றின் தொல்லைகள் எனப்பல்வேறு காரணிகள் இதற்கு காரணங்களாக அமைந்துள்ளன.

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மிகவும் பழைமைவாய்ந்த தென்னியன்குளம் கிராமத்தில் வாழும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள், அன்றாடம் சொல்லொண்ணாத் துன்ப துயரங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமத்திற்கான குடியேற்றத்திட்டம், 1964ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் அதற்கு முன்னைய காலத்தில் இருந்தே, பூர்வீகமாக மக்கள் அங்கு வாழ்ந்துள்ளனர்.

இதற்குச் சான்றாக, இங்குள்ள 200 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த கிறிஸ்தவ தேவாலயமும் இந்துக் கோவிலும் வரலாற்றுச் சான்றுகளாக அமைந்துள்ளன.

துணுக்காய் சந்தியில் இருந்து, 12 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள இக்கிராமம், ஆரம்பகாலத்தில் கிளிநொச்சி, பூநகரியுடன் தொடுக்கப்பட்டு காணப்பட்டது. பின்னர், மாவட்ட நிர்வாக அலகுகள் பிரிக்கப்படுகின்ற போது, முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பழைமை வாய்ந்த பயிர் செய்கைக் காணிகளில், கூடுதலான உரிமையாளர்கள் பூநகரி, வலைப்பாடு, பள்ளிக்குடா போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களுடையதாகவே காணப்படுகின்றன.

மேற்படி கிராமத்தில், தற்போது 150 இற்கும் அதிக குடும்பங்களைச் சேர்ந்த 540 பேர் வரையில்






தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

2008ஆம் ஆண்டுக்கு முன்னர், 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 1,000க்கும் அதிகமான மக்கள் வாழ்ந்தாலும், யுத்த அனர்த்த இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து, 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில், மேற்படி குடும்பங்கள் மாத்திரமே மீள்குடியேறியுள்ளன.

இங்கு, தற்போது வாழும் குடும்பங்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது. இரு போகங்களும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய சுமார் 4,385 ஏக்கர் கனஅடி நீர்க்கொள்ளளவு கொண்ட தென்னியன்குளம் என்ற பாரிய நீர்ப்பாசனக்குளமும் அதன் கீழான 850 ஏக்கருக்கும் அதிகளவான வயல் காணிகளும் உள்ளன.

இதுதவிர, பெரிய மாவில், உயிலடி, பாலமோட்டை, மூங்கில்குளம் போன்ற பகுதிகளிலும் 400 ஏக்கருக்கும் மேற்பட்ட வயற்காணிகளும் காணப்படுகின்றன. அத்தோடு 1,000 ஏக்கருக்கும் மேற்பட்ட குடியிருப்புகளுடன் இணைந்த மேட்டுக்காணிகள் காணப்படுகின்றன.

இவ்வாறு, பாரிய நிலப்பரப்புகளையும் நீர் வளத்தையும் கொண்ட இக்கிராமம், ஒரு முழுமையான விவசாயக் கிராமமாகவே காணப்படுகின்றது. இவ்வாறாயின் இங்குள்ள பிரச்சினை தான் என்ன என்பது பற்றிப் பார்க்கப்போனால், இந்த மக்கள் அன்றாடம் படும் துன்பங்கள் மிகமிகக் கொடியவையாகக் காணப்படுகின்றன.

எந்தவோர் அடிப்படை வசதிகளும் இல்லாத இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள், தமக்குத் தேவையான மருத்துவ வசதியையோ அல்லது ஏனைய வசதிகளையோ விவசாய உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தவோ அல்லது அவற்றுக்கான உரம், மருந்து வகைகள் உள்ளிட்ட பொருட்களைக் கொள்வனவு செய்ய 20 - 35 கிலோ மீற்றர் தூரம் எந்தவித போக்குவரத்து வசதிகளும் இல்லாத நிலையில், பயணித்து அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இங்கு ஆரம்ப பாடசாலை ஒன்று காணப்பட்டாலும் அதன் தேவைகள் முழுமையாக்கப்படாமலும் ஆளணி வளங்கள் நிறைவு செய்யப்படாமலும் காணப்படுகின்றன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம், உயர்தர கல்வியை தொடரும் மாணவர்கள், தினமும் 22 கிலோ மீற்றருக்கும் அப்பால் சென்று, தமது கல்வியைத் தொடர்கின்றனர். ஆனால், வீதிகள் புனரமைக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 10 கிலோ மீற்றர்தூரம், அடர்ந்த காட்டு வீதியாகவே காணப்படுகின்றது. அதிகாலையில் பயணிப்பது அல்லது, மாலையில் வீடு திரும்புவது, யானைகளின் நடமாட்டம் காரணமாகப் பெரும் உயிரச்சுறுத்தல் மிக்கதாகவே காணப்படுகின்றது.

இதுபோல, மேற்படி கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம், குரங்குகள் ஏனைய காட்டு விலங்குளின் அச்சுறுத்தல் என்பன பெரும் பிரச்சினைகளாகவே நிறைந்துள்ளன. குரங்கு போன்ற ஏனைய காட்டு விலங்குகளால் ஏற்படக்கூடிய அழிவுகளை ஓரளவு கட்டுப்படுத்தினாலும் காட்டு யானைகளின் தொல்லையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியதாக இல்லை என்று, இந்தமக்கள் அதங்கப்படுகின்றனர். பகல் வேளைகளில் கூட, காட்டு யானைகள் ஊர்மனைகளுக்குள் புகுந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

இரவு வேளைகளில் கூட நின்மதியாகத் தூங்க முடியாது, சிறுவர்களும் முதியோரும் பெண்களும் அச்சத்துடன் இரவுகளை கழிக்க வேண்டியுள்ளதாகவே இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு, பின்தங்கிய கிராமத்தின் அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்யாவிட்டாலும் பரவாயில்லை, தமது கிராமத்தைச் சூழ யானை வேலிகளை அமைத்தும் தமது கிராமத்திற்கான பிரதான வீதியை புனரமைத்தும் தரும்போது, தமது பூர்வீக கிராமத்தின் நீண்டகால பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று பிரதேச மக்கள் தெரிவித்தார்கள். இது தொடர்பான கோரிக்கைகளை, பல்வேறு தரப்பினரிடமும் முன்வைத்து வருகின்றபோதும், இதுவரை எந்தத் தீர்வும் இவர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

தமது தேவைகள் எப்போது நிறைவு செய்யப்படும் என்ற கேள்விடன், இந்த ஆண்டில் தீர்வு கிடைக்குமா என்ற நியாயபூர்வமான எதிர்ப்பார்ப்பு, தென்னியன்குளம் கிராம மக்களிடத்தில் உள்ளது.





# சரியான தீர்மானங்களால் மட்டுமே கைகலப்புகளைத் தவிர்க்கலாம்

மனிதன், தனது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை தேடிக்கொள்வதில் எவ்வளவுக்கு எவ்வளவு சிரமங்களுக்கு உள்ளாகின்றான் என்பது, வாழ்க்கையிலும் அனுபவமாக இருக்கவேண்டும்.

இவற்றில், உடையை என்றாவது ஒரு நாளைக்கு கொள்வனவு செய்தால், நீண்ட நாள்களுக்கு பாவிக்கலாம். வசதிபடைத்தவர்கள், மாதத்துக்கு இன்றேல் கிழமைக்கு இரண்டொன்றென மாற்றிக்கொள்வார்கள். இன்னும் சிலர், மலிவு விற்பனைக்குச் சென்று, அள்ளிக்கொண்டு வந்துவிடுவர். பிறந்தநாள் இன்றேல், ஏதாவது பெருநாள்களுக்கு மட்டுமே உடுதுணிகளை கொள்வனவு செய்வோரும் உளர்.

இரண்டாவதாக, கடுமையான முயற்சியின் பின்னர், நிரந்தரமான வீடொன்றை கட்டிக்கொண்டவர்களுக்கு, உறையுள் பிரச்சினை ஏற்படாது. சிற்சில நேரங்களில் அக்கம் பக்கத்தினர், தேவையில்லாமல் சீண்டிப்பார்த்தால், இல்லையேல் தவறுகள் இடம்பெறும் போது, தட்டிக்கேட்டால் முரண்பாடுகள் வந்து தணியும்.

ஆனால், மூன்றாவது தேவையான உணவை மனிதர்கள் மட்டுமன்றி, எந்தவோர் உயிரினங்களாலும் தவிர்க்கவே முடியாது. விரதமிருந்து தவிர்த்தால் ஒழிய, உயிர்வாழ்வதற்காக, எச்சந்தர்ப்பத்திலும் தவிர்க்க இயலாது. பிரதான உணவுக்குப் பின்னர், பழவகைகளை உண்ணுவதை பெரும்பாலானவர்கள் வழக்கமாகக் கொண்டிருப்பர். விசேட பண்ட வரிகளால் சிலருக்கு அதுவும் விக்குகிறது.

உணவை சமைக்க வேண்டுமாயின் ஏதோவொரு வகையில் பாத்திரங்களை சூடாக்க வேண்டும். சமையல் எரிவாயு தட்டுப்பாடு தொடர்கிறது. விறகுக்கான பற்றாக்குறை அதிகரித்துள்ளது. மின் தடையால், மின்சாதனங்களை பயன்படுத்தி, சமைப்பது சற்றுக் குறைந்துவிட்டது. ஒரே வேளையாக அல்லாமல் அந்தந்த வேளைக்கு சமைக்கவேண்டும். ஏனெனில், குளிர்சாதன இயந்திரங்கள் சூடாகவே இருக்கின்றன.

இவற்றுக்கு மத்தியில் எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்கான வரிசை, ஒவ்வொரு நாளும் நீண்டுகொண்டே செல்கின்றது. மண்ணெண்ணெய் பெறவிருந்த பெண்ணொருவர் மயங்கி விழுந்துள்ளார். அப்பெண் சாப்பிட்டுவிட்டு வரவில்லை. இல்லையேல், மண்ணெண்ணெயுடன் சென்றால் மட்டுமே வீட்டிலிருக்கும் பிள்ளைகள் உள்ளிட்டோர் சாப்பிடமுடியும் என்றொரு நிலை ஏற்பட்டிருக்கலாம்.

இதற்கிடையே, பல எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் ‘இல்லை’ என அறிவித்தல் பலகை கொழுவிவிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும், அதுவும் ஆயிரம் லீற்றருக்கு மேல் டீசல் நிரப்பப்படுகின்றது.

காலையில் இருந்து, எரிபொருள் பௌசர் வரும் வரையிலும் கால்கடுக்க காத்திருந்தவர்கள் வெறும் கையுடன் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். ‘இல்லை’ என அறிவித்தல் பலகையை கொழுவிவிட்டு, பின்கதவின் ஊடாக எரிபொருள் விநியோகிக்கப்படுவதால், காத்திருப்பவர்களுக்கும் விநியோகிப்பவர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, அது கைகலப்பில் முடிந்துவிடுகின்றது.

ஓர் எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் தாங்கியின் கொள்ளளவு பணியில் இருப்பவர்களுக்குத் தெரியும். எத்தனை லீற்றர் விநியோகிக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியும். ஆக, நிறைவடைய போகிறது என்றால், வரிசையில் நிற்பவர்களுக்கு ஓர் அறிவிப்பொன்றை விடுக்கலாம். அதனூடாக கைகலப்பை தவிர்க்கமுடியும். அதேபோல, சரியான தீர்மானங்களை எடுப்பதன் ஊடாக, மக்கள் கோபத்துக்கு உள்ளாவதில் இருந்து தவிர்க்கலாம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

அன்பான இதயம் படைத்தோருடன், ஆச்சரியமாக நல்ல நண்பர்கள் இணைந்து கொள்வார்கள். இன்ப, துன்பங்களுடன் இணைந்து நிற்பவர்கள், நண்பர்கள் என்றால் அது மிகையாகாது.

பல விடயங்களைப் பேசி, எதுசரி, எதை ஏற்றுக்கொள்ள முடியாது எனும் விவாதங்களை பெற்றோர், உற்றார், உறவினர்களிடமும் பேசலாம். ஆனால், வெட்கம் இன்றிப் பேசுவதற்கு நல்ல நட்புள்ள சிநேகிதன் தேவைப்படுகின்றான்.

நல்ல நட்பை உதறவே கூடாது. சந்தேகம் நட்புக்குச் சத்துரு. எந்தச் சந்தேகங்களையும் மனத்துக்குள் முடக்காமல், திறந்த மனத்துடன் கோபதாபங்கள் இன்றிப் பேசுவதே சிறப்பு.

சில சமயங்களில் நண்பர்கள் எனும் உரிமையில் கண்டபடி சிலர் வார்த்தைகளை விடுவதுண்டு. எவர் நெஞ்சமும் புண்படுத்துதல் கூடாது. எனவே, எவரேயாயினும்செய்த தவறை வளர்க்காமல் உடன் மன்னிப்புக் கேட்டேயாக வேண்டும்.

உங்களைப் புரிந்துகொண்ட உற்ற தோழன், நீங்கள் செய்த சிறிய தவறுகளைத் தேடவும் மாட்டான். ஆனால், எந்தத் தவறுகளையும் தேவைப்பட்டால் கண்டிப்பான். நட்பைவிட உரிமை வேறு இல்லை.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஜனாதிபதி

# பதவி விலகலுக்கு சாத்தியமுண்டா?

லக்ஸ்மன்

ஜனாதிபதி உரையாற்றுகிறார் என்றவுடனேயே எல்லோரும் பதவிவிலகும் அறிவித்தலைத்தான் சொல்லுவார் என்று எண்ணுமளவுக்குத்தான் நிலைமை இருந்தது. வாழ்க்கைச் சுமை அதிகரித்துவிட்டது. யார் எதனைச் செய்யமுடியும் என்றே இருக்கிறது. ஒரு சமூகமோ நாடோ, வெறுமனே வசதி படைத்தவர்களை மாத்திரமோ, சாதாரண மக்களை மாத்திரமோ கொண்டதல்ல. அதில் நடுத்தர மக்களும்தான் உள்ளடங்குகிறார்கள். இதில் யாருக்குத் திண்டாட்டம், யாருக்கெல்லாம் பெரும் திண்டாட்டம் என்று யாரும் கணக்குக் போட முனைவதில்லை.

நாட்டுக்குள் கேள்விக்குட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இன உரிமை, மனித உரிமை மீறல் விடயங்கள், சர்வதேசத்திலிருந்து வரும் மனித உரிமைப் பிரச்சினைகள் ஒருபுறம், அழுத்தங்கள் மறுபுறம், வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவது தொடர்பான பிரச்சினை, எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தித்தல் என பல பிரச்சினைகளை நாடு இப்போது எதிர் கொண்டுள்ளது.

இவற்றினை எவ்வாறு சீர் செய்வதென்று தெரியாத நிலையில் அவசர அவசரமாக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு, இந்தியாவுக்கு நிதி அமைச்சர் விஜயம், ஒப்பந்தம் கைச்சாத்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு அழைப்பு என்று நடவடிக்கைகள் விரியத் தொடங்கின. ஆனால், எதிர்க்கட்சியினரின் ஒருங்கிணைந்த எதிர்ப்புப் போராட்டம் காரணமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடனான சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடனான சந்திப்பு நடைபெறுமா என்பது சந்தேகமாக இருந்த நிலையில் எதிர்க்கட்சியினரின் போராட்டம் காரணம் காட்டப்பட்டு பிற்போடப்பட்டதாகவே சொல்லப்படுகிறது. அப்படியானால் எதிர்க்கட்சியினரின் போராட்டம் ஜனாதிபதியை குழப்பிவிட்டதாகவே அர்த்தம் கொள்ளமுடியும்.

எதிர்க்கட்சியினரின் போராட்டத்திற்கு மறுநாள் நாட்டுமக்களுக்கு ஜனாதிபதி உரையாற்றினார். ஒவ்வொரு தடவையிலும் ஏதோ ஒன்றைச் சொல்லி, மக்களை சரி செய்வதற்கு அவருக்கு என்ன தேவையிருக்கிறது என்பதுதான் இந்த இடத்தில் கேள்வி.

அப்படியானால் ஜனாதிபதிக்கு தன்னுடைய முடிவுகளில் தனது அரசாங்கத்தின் செயற்பாடுகளின் மீது எதிர்க்கட்சியினரும் எதிர்த் தரப்பினரும் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுகள் சரியானதும் யதார்த்தமானவையும் என்பதே அர்த்தமாகும்.

தனது உரையின் போது, “உங்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வை நான் நன்கு அறிவேன். எரிவாயு தட்டுப்பாடு அதே போன்று, எரிபொருள் தட்டுப்பாடு, மின்வெட்டு போன்ற பிரச்சினைகளை நான் நன்கு அறிவேன். கடந்த இரண்டு மாதங்களாக பொதுமக்கள் அனுபவித்த பல இன்னல்கள் குறித்தும் நான் நன்றாக உணர்ந்துள்ளேன். அதற்காக எங்களால் செய்ய முடிந்த அனைத்தையும் நாம் செய்தாலும், எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் இந்த நிலைமை தொடரும் என்பதை நான் அறிவேன்.

சில காலம் சிரமங்களைச் சந்திக்க நேரிடும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொண்டு, தைரியத்தை இழக்காமல் இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஒரு தேசமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்” என்ற கோரிக்கையை ஜனாதிபதி கோட்டாபய நாட்டு மக்களிடம் விடுத்தார்.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்களை அடுத்து உருவான அதிர்ச்சியானது அதிர்வு சிங்கள மக்களிடம் ஏற்படுத்திய மீண்டுமொரு பயங்கரவாத அச்சுறுத்தல் என்ற பெரும் இனத் துவேசம் புதிய ஜனாதிபதிக்கான கதவைத் திறந்துவிட்டது.

குழப்பங்கள், சிக்கல்களுடன் இருந்த நல்லாட்சி அரசாங்கம் வீழ்த்தப்பட்டது. அவரது பதவியேற்புக்குப்பின்னர், இந்த அரசாங்கம், ஆட்சிப் பொறுப்பினை ஏற்கின்ற வேளையிலேயே உலகில் கொவிட்-19 பரவல் ஆரம்பித்துவிட்டிருந்தது. ஆனால், ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனேயே ஆரம்பிக்கப்பட்ட அதிவேக நெடுஞ்சாலைகளுக்கான திட்டங்கள், ஒரு லட்சம் கிலோ மீற்றர் காபட் வீதிகள் திட்டம், விவசாயத்துக்கான இரசாயன கிருமிநாசினிகளுக்கான தடை, இரசாயனப் பசளை இறக்குமதித் தடை என உலகின் நிலைமைகள் அறியாது முன்னெடுக்கப்பட்ட திட்டங்களால் நாட்டு மக்களின் உற்பத்தித் துறையை வீழ்த்தியதுடன், மக்களின் வாழ்வாதாரங்களில் சம்மட்டியால் அடித்துவிட்டது என்றே சொல்லலாம்.

கால ஓட்டங்களுக்கு ஏற்ப திட்டங்களை முன்வைக்கின்ற நிலைமைகளைப் புரிந்து கொண்டு அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதும் சாதாரண தனிமனித வாழ்க்கையிலேயே சாதாரணமானவைகளாகும். அரசாங்கத்துக்குள்ளேயே இருக்கின்ற ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு முரண்பாடுகள் இருந்தாலும் நாம் எடுக்கின்ற முடிவுகள் எல்லாம் சரியானவையே என்ற இறுமாப்பு, நாட்டை உலக நிலைமையை காண்பித்து ஏமாற்றுவதற்கான தேவையை ஏற்படுத்தியிருக்கிறது என்றே கொள்ளலாம்.

உணவு உண்ணும் அளவுகளில், உணவு முறைகளில் கூட மாற்றங்களை ஏற்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. எரிவாயு இல்லாது விறகு அடுப்புகள் வீடுகளுக்கு வந்துவிட்டன. சாதாரண மக்களின் வாழ்க்கை நிலை மிகுந்த பாதிப்புடையதாக மாற்றமடையவில்லை. ஆனால், நடுத்தர மக்களின் வாழ்க்கையும் வசதி படைத்தவர்களின் நிலைமைகளுமே மோசமடைந்திருக்கின்றன.

“நான் செய்யும் செயல்களுக்கு நான் பொறுப்பேற்கிறேன். பொதுமக்கள் அனுபவிக்கும் ஒரு சில சிக்கலான வாழ்க்கை முறைகளுக்கு தீர்வு காண இன்று நான் கடுமையான முடிவுகளை எடுக்க உறுதிபூண்டுள்ளேன். அதற்கு உதவ தேசிய பொருளாதார சபையையும், அதற்கு ஒத்துழைப்பு வழங்க ஓர் ஆலோசனைக் குழுவையும் நியமித்தேன்” என்று கூறியுள்ள ஜனாதிபதி, இதற்கு முன்னர் நிறுவிய ஆலோசனைக்குழுக்கள் ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைப் பற்றிச் சிந்தித்திருக்கிறாரா என்பது தெரியாத ஒன்று. குடி மூழ்கிப் போனதன் பின்பும் இவ்வாறான குழுக்களை நியமிப்பதில் என்ன பயன் இருக்கும் என்பதுதான் பொது மக்களிடம் உள்ள கேள்வியாகும்.

இப்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்பு, இனி வரும் எத்தனை வருடங்களுக்குப் பிரதிபலிக்கப்போகிறதோ என்பது அறிய முடியாததே. ஆட்சியிலிருக்கும் இந்த அரசாங்கத்தால் மாத்திரமல்ல இனி ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கத்தாலும் வீழ்ச்சியடைந்துவிட்ட நாட்டை அவ்வளவு இலகுவாகத் தூக்கி நிறுத்திவிட முடியாது என்பதே உண்மை.

நாடு அதள பாதாளத்துக்குள் வீழ்ந்துவிட்ட போதும் தான் எடுக்கும் முடிவுகள் திட்டங்கள் செயற்படுத்தப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்க நடவடிக்கை எடுக்கும் நிலையிலேயே ஜனாதிபதி இருக்கிறார். எடுத்த முடிவுகளில் தவறிருக்கிறதா என்பதனை அவர் ஆராய முற்படவில்லை. அதனைப்பற்றிய சிந்தனையும் அவருக்கில்லை. அந்த வகையில், 69 இலட்சம் மக்களினதும் விருப்பம் தான் எடுக்கும் முடிவுகளே என்று அம் மக்களின் மனங்களில் வெறுப்பும் கோபமும் உருவாகி விட்டபோதும் அவருக்கிருக்கும் நம்பிக்கையைப் பாராட்டவே வேண்டும்.

ஆனால், பெரும்பான்மையான மக்களிடம் இருக்கின்ற நாட்டில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு ஆட்சி மாற்றம் ஒன்றுதான் தீர்வா என்று கேட்டால். இல்லையென்றுகூட பதிலைச் சொல்லிவிட முடியுமாக இருந்தாலும், அது மாத்திரம் உண்மையில்லை என்பதும் எல்லோருக்கும் தெரியும்.

ஆனாலும், ஜனாதிபதியின் உரையில் நாங்கள் எதிர்கொண்ட கொடூரமான பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் முன்னணியில் இருந்த படைவீரர் மற்றும் போரில் சிக்கிய அப்பாவி பொதுமக்கள் எதிர்கொண்ட அனைத்து சிரமங்களையும் நன்கு புரிந்துகொண்டு, அவற்றை முறையாக நிர்வகிக்க என்னால் முடிந்தது என்ற கருத்தானது அவர்களிடமுள்ள இந்தப் பயங்கரவாதம், இனத் துவேசச் சிந்தனை எவ்வளவுக்கு வேரூன்றியிருக்கிறது என்பதனையும், இன்னமும் அவர்கள் இருக்கின்ற இந்த உணர்வினையும் அச்சத்தினையும் பயன்படுத்த முனைகிறார் என்பதும் நன்கு தெரிகிறது.

அந்த வகையில்தான் நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டவர்கள் அதனைக் கைவிடவேண்டிய நிலைக்கு வந்துவிடவேண்டும். நாட்டு மக்களின் நலன்களைக் கவனத்திலெடுக்க வேண்டிய அரசாங்கம், இது எங்களது கட்டுப்பாட்டில் இல்லை என்று கையை விரிப்பதானது, கஜானாவில் ஒன்றுமில்லாதிருக்கின்றபோதே நடைபெறும். அந்த வகையில் கஜானா காலியானதற்கான காரணங்கள் என்ன என்பதே நாட்டு மக்கள் சிந்திக்க வேண்டியதாகும்.

காலத்துக்கு ஏற்ப கட்டாயத் தேவையானதை விடுத்து, அதிவேக நெஞ்சாலை, காபற் வீதிகள் என நினைத்ததற்கெல்லாம் செலவு செய்துவிட்டு கொவிட்-19 நோய்த் தொற்றினால் அதிகரித்த கப்பல் கட்டணங்கள், பொருட்களின் விலை அதிகரிப்பு, பொருட்களின் தட்டுப்பாடு போன்ற காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தவுடன் மஞ்சள் இறக்குமதித் தடை, உழுந்து போன்ற பொருட்களுக்கான தடை என மக்களிடமிருந்த பெருந்தொகைப் பணம் வீணாக்கப்பட்டது. மஞ்சள் இறக்குமதி தடை செய்யப்பட்ட வேளையில்தான் கொவிட்-19 தாக்கத்தினைக் குறைப்பதற்கான தொற்று நீக்கியாக மஞ்சள் இருந்தது. அதனைக் கொள்வனவு செய்வதில் மக்கள் பெருந்தொகைப் பணத்தினைச் செலவு செய்யவேண்டி ஏற்பட்டது. இப்போதும் அந்த விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுவிடவில்லை.

இவ்வாறு உணவை விடுத்து, முக்கிய தேவைகளை விடுத்து வேறு விடயங்களுக்கு மக்களை வீணாகத் திசைதிருப்பி மக்களின் நலன்கள் வீணடிக்கப்பட்டன.

மானியத்தினை வழங்கவேண்டிய நிலையில் மக்கள் வடித்துத் துடைத்து எடுக்கப்படுகின்றனர். அரச உத்தியோகம் செய்பவர்கள் முதல், அன்றாடத் தினக்கூலி வரையில் யாரும் எல்லாவற்றையும் எதிர்கொண்டே வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலையில் நாடு இருக்கிறது.

இவ்வாறு, “எதுவும் தம் கையில் இல்லை” கட்டுப்பாட்டில் இல்லையானால் எதற்காக அரசாங்கம் என்று ஒன்று தேவை என்ற கேள்வி அனைத்து மக்களிடமும் தோன்றியிருக்கிறது. மக்கள் நலன், இந்த இடத்தில் எவ்வகையில் கவனத்தில் எடுக்கப்படும் என்பது கேள்வி.

## கடிதங்கள்

### கிண்ணியா சிறுபோக வேளாண்மை செய்கை பாதிப்பு

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பட்டியனூர், சுங்கான் குழி முதலான பிரதேசங்களில் சிறுபோக வேளாண்மைச் செய்கைக்கான உழுதுதல், விதைத்தல், காலாவுதல் போன்ற நடவடிக்கைகளுக்காக உழுதுவதற்கும் உழவு இயந்திரத்தை இயக்குவதற்கும் டீசலைப் பெற்றுக் கொள்வதில் விவசாயிகளும் உழவு இயந்திரச் சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதிகளில் சுமார் 180 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில், சிறுபோக வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன . அவ்வயல் நிலங்களை உழுவதற்கு உழவு இயந்திரத்திற்கான டீசல் இல்லாமல் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

“உழவடிக்க, நீர் இறைக்க டீசல் இல்லை மண்ணெணெய் இல்லை. மூன்று, நான்கு நாள்கள் போலினில் இருந்து கஸ்டப்பட்டுத்தான் டீசலைப் பெறுகின்றோம். சிறுபோக வேளாண்மையை கஸ்டப்பட்டுத் தான் செய்கிறோம். இதைச் செய்யாவிட்டால் சாப்பாடு இல்லை.

“பெரும் போகத்தில் சேதனப் பசளை தந்து விவசாயம் அழிந்து போயிற்று. 10, 12 மூடைகள் அறுவடை செய்தது போல, இப்ப டீசல் இல்லாமல் விவசாயம் அழிந்துபோகும் நிலையுள்ளது”.

அத்துடன் வாழை, தென்னை தோட்டச் செய்கையாளர்களும் நீர்ப்பாய்ச்சுவதற்கான நீர்ப் பம்பிக்கான மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே டீசல், மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு உதவி செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– ஹஸ்பர்



முஹைதீன் ஜும்ஆ மஸ்ஜித் ( பெரிய பள்ளி)

# புத்தளத்தின் கம்பீரம்



ரஸீன் ரஸ்மின்

புத்தளம் சிறு கடலோரப் பகுதியில் தலைநிமிர்ந்து நிற்கும் முஹைதீன் ஜும்ஆ மஸ்ஜித் ( பெரிய பள்ளி) புத்தளத்தின் நில அடையாளமாகத் திகழ்கிறது. படங்களில் முதலில் காண்பித்து, பின்னர் தகவல்களைக் கேட்கும் முன்பே, இது புத்தளம் நகரம் என்று சொல்லக் கூடிய வகையிலும், வெளிமாவட்டங்களில் இருந்து புத்தளம் நகருக்கு வருபவர்கள் அல்லது புத்தளம் நகர் ஊடாக பயணிப்பவர்களை வரவேற்று கம்பீரமாகக் காட்சியளிக்கும் இந்தப் பெரிய பள்ளிவாசலை எவரும் எளிதில் மறக்க மாட்டார்கள்.

இலங்கையின் தொன்மையான குடியிருப்புகளில் புத்தளம் பிரதேசமும் ஒன்றாகும். கி.மு மூன்றாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் வடக்கேயுள்ள பொன்பரப்பி பற்று பகுதி சிறப்புடன் விளங்கிய காலத்தில் புத்தளத்திலும் குடியிருப்புகள் இருந்துள்ளன. குதிரை மலைப் பகுதியின் செல்வாக்கிழந்து போய்க்கொண்டிருந்த காலகட்டத்தில் புத்தளத்தின் முக்கியத்துவம் ஆரம்பித்துள்ளது.

புத்தளத்தில் அரேபியர்களின் தொடர்பும், குடியேற்றமும் பண்டுதொட்டு இருந்துள்ளமையை வரலாறுகள் மூலம் அறியக் கிடைக்கின்றது. கி.மு 544 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விஜயன் புத்தளத்துக் கரையை வந்தடைவதற்கு முன்னரே நாகரிகம் சிறந்த, கட்டுக்கோப்பான சமுதாய அமைப்பொன்று புத்தளத்தில் இருந்துள்ளது. புத்தளத்தில் வந்து குடியேறிய முஸ்லிம்கள், அரேபியாவிலிருந்து ஹாஷிம் வம்சத்தின் வழித் தோன்றல்கள் எனச் சொல்லப்படுகிறது. அவர்கள் புத்தளம் பகுதிகளில் வசதியான கரையோரங்களில் குடியிருப்புகளை அமைத்துள்ளதுடன், மஸ்ஜித்களையும் நிர்மாணித்துள்ளனர்.

அந்த வகையில் 1494ஆம் ஆண்டு காலப்பகுதியில் பள்ளிவாசல் உபயோகத்துக்கு என காணித் துண்டு ஒன்றை மீரா உம்மா என்பவர் வக்பு செய்து ( பொதுச் சொத்தாக) அன்பளிப்பாக வழங்கினார். இந்த காலப்பகுதியில் மஸ்ஜிதை சுற்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இந்திய முஸ்லிம்கள், இஸ்லாத்தை வளர்ப்பதிலும், மஸ்ஜிதுக்கு தேவையான சகல உதவிகளையும் செய்துகொடுத்தனர்.

மஸ்ஜிதில் பணிபுரியக் கூடிய கதீப்மார்கள், முஅத்தின்கள் உள்ளூரில் இல்லாமையால், இந்தியா கீழக்கரை, கால்வாய் பட்டினம், அதிகாரம் பட்டினம், குலசேகரப் பட்டினம், தொண்டி போன்ற இடங்களில் இருந்து கதீப்மார்களையும், முஅத்தின்களையும் அழைத்து வந்து இந்த முஹைதீன் மஸ்ஜிதுக்கு உயிரூட்டினார்கள் என வரலாறு கூறுகிறது. 1920 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் திகதி கண்டி மன்னரும் இலங்கையின் கடைசி மன்னருமாகிய ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்கன், புத்தளத்திற்கு விஜயம் செய்தார். இது முஹைதீன் தர்காவின் வரலாற்றின் பொன்னாளாக கருதப்படுகிறது. இவ்வாறு புத்தளம் வருகை தந்த கண்டி மன்னரை மக்கள் மிகவும் சந்தோஷமாக வரவேற்றனர்.

தன்னை கௌரவித்த புத்தளம் மக்களுக்கு தானும் கௌரவிக்க வேண்டும் என்று நாட்டம் கொண்டு, அரச சின்னங்கள், உத்தியோகபூர்மான கொடி, கவரிமான் முடி பதிக்கப்பட்ட இரு வெண் சாமரைகள், 18 வெள்ளி குஞ்சங்களும் பாரிய ஊதுகுழல் உட்பட ஆலவட்டங்கள், தோரணங்கள், கொடிகள், பெரிய பூமணி விளக்கு (காழா விளக்கு) என்பன கண்டி மன்னரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.



மணிக்கூடு உள்பகுதி

விஷேட சந்தர்ப்பங்களில் அன்றி, சாதாரணமாக இத்தகைய சின்னங்கள் மன்னர்களால் நேராக அன்பளிப்பு செய்யப்படுவதில்லை என்றாலும், கண்டி மன்னர் புத்தளம் மக்களுக்கு அளித்த பெரும் கௌரவமாக இந்தக் காணிக்கைகள் பார்க்கப்படுகின்றன.

இவ்வாறு கண்டி மன்னர் வழங்கிய அன்பளிப்புக்களில் தற்போது ஊது குழலின் ஒரு பகுதியும், கவரிமான் முடி பதிக்கப்பட்ட வெண்சாமரை ஒன்றும் புத்தளம் பெரிய பள்ளிவாசலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 1934 ஆம் ஆண்டு முஹைதீன் மஸ்ஜிதுக்கு புதிய கட்டடம் ஒன்றை கட்டுவதற்காக பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 1938 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி புத்தளம் சோனகத் தலைவர் ஹமீத் ஹுஸைன் மரிக்கார் என்பவரால் குறித்த மஸ்ஜித் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த மஸ்ஜித் கட்டப்பட்டு திறந்து வைக்கப்படுவதற்கு முன்னர், பழைய கொத்துபாப் பள்ளியில்தான் தொழுகைகள் நடைபெற்றன. அந்தப் பள்ளி பழுதடையவே ஐவேளைத் தொழுகைகளை முஹைதீன் தர்கா கட்டடத்தில் நடத்த அதன் நிர்வாகத்தினர் தீர்மானித்தனர். அதனையடுத்து, ஐவேளை தொழுகைகளும் விஷேட சமய நிகழ்வுகளும் அந்தக் கட்டடத்திலேயே நடத்தப்பட்டன.

பழுதடைந்த கொத்துபாப் பள்ளிவாசலை புனரமைப்பது வீண் செலவு என நினைத்து புதிய கட்டடம் ஒன்றை புனரமைக்கும் நோக்கில் முஹைதீன் தர்ஹா அமைந்திருந்த இடத்திலேயே புதிய பள்ளிவாசலுக்கான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இன்று பல இலட்சங்களை செலவு செய்து அழகிய முறையில் மஸ்ஜித்களை நிர்மாணித்து வருகின்றனர். எனினும் 1938ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட புத்தளம் முஹைதீன் ஜும்ஆ மஸ்ஜித் அழகு மிளிரும் வனப்புடன் இலங்கையில் பிரசித்தி பெற்ற மஸ்ஜித்தாக திகழ்கின்றது.

## மின் விசிறியற்ற மஸ்ஜித்

இந்த மஸ்ஜிதின் உட்புற மண்டபம் 90 அடி 40 அடியாகும். தூண்களற்ற இப்பெரிய மண்டபத்தில் ஒரு மின் விசிறி கூடப் பொருத்தப்படாமை விசேடமாக குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

புத்தளம் பிரதேசமானது வரண்ட காலநிலையைக் கொண்ட பிரதேசமாகும். இங்கு மின் விசிறி இன்றி வாழ்வது மிகவும் சிரமமான போதிலும், இந்த முஹைதீன் ஜும்ஆ மஸ்ஜிதுக்கு மின் விசிறி அவசியமற்றதாகிப் போய்விட்டது.

புத்தளம் சிறு கடலோர காற்று ‘குளு குளு’ என்று எப்போதும் வீசிக்கொண்டே இருக்கும். இதனால், இந்த மஸ்ஜிதுக்கு தொழுகைக்காக வரும் உள்ளூர், வெளியூர் மக்கள் இந்த மஸ்ஜிதில் இருந்து இறைவனைத் தொழுவதிலும், தியானிப்பதிலும் தனி இன்பத்தை அனுபவிப்பதாக சொல்வார்கள்.

## மணி ஒலிக்கும் கடிகாரம்

இந்த மஸ்ஜிதில் பொருத்தப்பட்டிருக்கும் பெரிய கடிகாரம் நாலாபுறத்திலிருந்தும் நேரத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு கால் மணித்தியாலயத்துக்கும் மணியை ஒலிக்கும் கருவிகள் இந்த மணிக்கூட்டில் பொருத்தப்பட்டுள்ளன. அத்துடன், குறிப்பிட்ட நேரத்தில் கவனயீர்ப்பு மணி (அலாரம்) தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருக்கக் கூடிய வசதியும் அதில் இருக்கின்றது.

இவ்வாறு பொருத்தப்பட்டுள்ள கடிகாரத்தினை இந்த மஸ்ஜிதில் உப பரிபாலகராக இருந்த முஹம்மது இப்றாஹிம் நெய்னா மரைக்கார் தனது சொந்த நிதியில் பெற்றுக் கொடுத்துள்ளார். மக்கோன சிறுவர் சீர் திருத்த பாடசாலையைச் சேர்ந்த கிறிஸ்தவரான தோமஸ் என்பவரே இந்த பெரிய கடிகாரத்தை வடிவமைத்துக் கொடுத்துள்ளார் என சொல்லப்படுகிறது.

இந்த மஸ்ஜிதின் முற்றவெளி தேசிய மீலாத் விழவை முன்னிட்டு பாதை அமைக்கப்பட்டு, தொழுகைக்காக கற்கல் பாதிக்கப்பட்டு, பூந்தோட்டம் அமைக்கப்பட்டு மஸ்ஜிதின் அழகுக்கு மேலும் மெருகூட்டுகிறது.

அத்துடன், மஸ்ஜிதிக்கு வருகை தரும் அனைவரையும் வியக்கவைக்கும் வகையில், கலை நுணுக்கத்துடன் இந்த மஸ்ஜிதின் மிம்பர் , மிஹ்ராப் என்பன வடிவமைக்கப்பட்டுள்ளது.

புத்தளத்தில் பண்டைய வரலாற்றுடன் பின்னிப் பிணைந்துள்ள இப்பள்ளிவாசல், புத்தளத்தின் வருங்கால சந்ததிகளின் கலாசாரத்தின் ஊற்றுக்கண்ணாக விளங்கி, பண்டைய பெருமைகளை நினைவூட்டி, கம்பீரமாக காட்சியளித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இந்த மஸ்ஜிதுக்கு இறைவன் சொரிந்து கொண்டிருக்கும் அருள் மழையில், புத்தளம் மக்களும் நனைந்து பாதுகாப்பாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.



கடிகார மணி

ஊது குழல், கவரி மானின் முடி பாதிக்கப்பட்ட வெண் சாமரம்



---

கொள்கை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட

# சம்பள முறைமையின் அவசியம்



டொக்டர் வாசன் இரட்ணசிங்கம்
ஊடகப் பேச்சாளர், அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயற்குழு உறுப்பினர்

அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பில் நாடு தற்போது நெருக்கடியான கட்டத்தில் உள்ளது. 2006/06 சுற்றறிக்கையால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய சம்பள கொள்கையின் நோக்கமானது பல்வேறு பிரிவினருக்குத் தற்காலிக வேதனத் திருத்தம் காரணமாகக் கிட்டத்தட்டச் சிதைவடையும் நிலைக்கு தள்ளப்பட்டது.

இந்தத் துரதிர்ஷ்டவசமான நிலை, தேசிய வேதனக் கொள்கையை மீறி அரசாங்கம் ஆசிரியர்களின் சம்பளத்தை மீளமைத்தமை மற்றும் பிற பிரிவினரின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குத் தீர்வுகள் வழங்கியமை போன்றன மூலம், மூடிய சேவை அறிவிப்பின் மூலம் ஆரம்பமானது.

இன்று சுகாதாரத்துறையில் தொழிற்சங்கத் தலைவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் அரசியல் கைக்கூலிகள், தேசிய சம்பளக் கொள்கையை மீறுவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து, ஆசிரியர்கள், அதிபர்களுக்கு நிகராக தங்களின் வேதனத்தை உயர்த்திக் கொள்ள அதனை மூடிய சேவையாக்குகிறார்கள்.

தொழிற்சங்க வாதிகள் என்று அழைக்கப்படுபவர்களின் கோரிக்கை, தேசிய சம்பளக் கொள்கை மற்றும் மூடிய சேவை தொடர்பான அவர்களின் கல்வியறிவின்மையைப் பிரதிபலிக்கிறது என்பதை பொது அறிவு உள்ள எவரும் கணிக்கமுடியும்.

கவலைக்குரிய விடயம் என்னவென்றால், கொள்கைகளைப் பாதுகாக்கும் தொனியில் ஆட்சிக்கு வந்த அரசு, சதிகாரர்களின் தேவைக்கு அமையக் கொள்கைகளை மீறுகின்றமை தெளிவாக வெளிப்படுகின்றது. இதனால், அரச சேவையை நலிவுறச் செய்து, தனியார்மயமாக்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ள விரும்புகிறதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

> **சுகாதாரத்துறையில் தொழிற்சங்கத் தலைவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் அரசியல் கைக்கூலிகள், தேசிய சம்பளக் கொள்கையை மீறுவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து, ஆசிரியர்கள், அதிபர்களுக்கு நிகராக தங்களின் வேதனத்தை உயர்த்திக் கொள்ள அதனை மூடிய சேவையாக்குகிறார்கள்**

எனவே, அரச சேவையைப் பாதுகாப்பதற்கும், அதன் மூலம் பயனுள்ள பொதுச் சேவையின் ஊடாக மக்களுக்குத் தரமான சேவையை வழங்குவதற்கும் கொள்கை அடிப்படையிலான சம்பளப் போராட்டத்துக்கான அவசியம் முன்னெப்போதையும் விடவும் அதிகமாக உள்ளது.

ஊழியர்களை அரசு அல்லது தனியார்துறைக்கு ஈர்ப்பதிலும், பணியாளரைத் தக்கவைத்துக்கொள்வதிலும், அவர்களைச் சரியாகக் கண்டுபிடித்து, அதிகபட்ச செயற்றிறனுடன் பணியமர்த்துவதற்கும் சம்பளம் மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். கொள்கை அடிப்படையிலான சம்பளக் கட்டமைப்பானது, பிரிவுகளுக்கு இடையே உள்ள பிணக்குகளைக் குறைப்பதன் மூலம் இறுதியில் ஒரு நிறுவனத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யும். இதுவே தனியார்த் துறையின் சம்பள நிர்வாகத்தின் அடிப்படையாகும்.



டொக்டர் செனால் பெர்னாண்டோ
செயலாளர், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

மேலும் 2006 ஆம் ஆண்டு தேசிய சம்பளக் கொள்கையை பொதுத்துறையிலும் கடைப்பிடிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டமை இதன் மூலம் சுட்டிக்காட்ட முடியும். தேசிய சம்பளக் கொள்கையின் நிர்ணயமானது, குறைந்தபட்ச கல்வித் தகமை, வேலையின் தன்மை, பொறுப்புக்கூறல், பொறுப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். மனித வளத்தைப்பேணுதல், தொழிற்சங்க நெருக்கடியை குறைப்பதன் மூலம் மக்களுக்குத் தொடர்ந்து சேவைகளை வழங்குவதற்கு உதவும் வகையில், அடிப்படைச் சம்பளம், சம்பள அதிகரிப்புகள் மற்றும் இதர கொடுப்பனவுகள் போன்றவையும் கொள்கையில் உள்ளடங்கும்.

அரச இயந்திரத்தின் மூலம் எந்தவொரு சேவையையும் பெற்றுக்கொள்வது நாட்டு மக்களுக்குக் கிடைக்கும் வரப்பிரசாதமாகும். உதாரணமாக, நோயாளிகள் அரசுத் துறையில் ஒரு விசேட வைத்திய நிபுணரை இலவசமாகப் பார்க்க முடியும் என்ற போதும், அதே விசேட வைத்திய நிபுணரைத் தனியார துறையில் பார்க்கும் போது கணிசமான அளவு பணம் செலவாகும்.

பட்டயக் கணக்காளர்கள், பொறியியலாளர்கள், வழக்கறிஞர்கள், கட்டடக் கலைஞர்களின் சேவைகளை மக்கள் பெற வேண்டுமானால், பொதுத் துறையில் ஊழியர்களின் வகைகளைத் தக்கவைத்துக்கொள்வது அவசியம் என்பது தெளிவாகிறது. ஆனால் இந்தத் தொழிற்றுறையினர் தனியார்துறையிலோ அல்லது வெளிநாடுகளிலோ அதிகப்படியான சம்பளத்தை நாடிச் செல்வதால், உள்நாட்டில் சேவைகளைப் பெறும் மக்கள் தவிர்க்க முடியாத பெரும் செலவினங்களைச் சந்திக்க நேரிடுகிறது.

எனவே அரச சேவையில் மேற்கூறிய பிரிவினரை நிலைநிறுத்துவதற்கும் ஏனைய பிரிவினரின் சேவைகளைச் சரியான கட்டமைப்பில் பேணுவதற்கும் சம்பளம், சம்பள அதிகரிப்புகள், இதர கொடுப்பனவுகள் தொடர்பான தேசிய கொள்கையைக் கொண்டிருப்பது அவசியமாகும். இல்லையேல் பொதுச் சேவையானது வினைத்திறனற்றதாகி, தேசிய சம்பளக் கொள்கையை மீறுவதினால் இறுதியில் மக்கள் சிரமத்துக்கு ஆளாக நேரிடும்.

> **பட்டயக் கணக்காளர்கள், பொறியியலாளர்கள், வழக்கறிஞர்கள், கட்டடக் கலைஞர்களின் சேவைகளை மக்கள் பெற வேண்டுமானால், பொதுத் துறையில் ஊழியர்களின் வகைகளைத் தக்கவைத்துக்கொள்வது அவசியம் என்பது தெளிவாகிறது**

சில தொழிற்சங்கத் தலைவர்கள், தேசிய சம்பளக் கொள்கையைக் கூட அறியாமல் தங்கள் தொழிற்சங்கப் பெயருக்கு முன்னால் தங்களை ‘விஞ்ஞானிகள்’ என்று அடையாளப்படுத்திக்கொண்டு சம்பளப் போராட்டத்தில் இறங்கியதாகத் தெரிகிறது. அவர்களின் கோரிக்கைகள், அவர்களின் அரசியல் அபிலாஷைகளை முன்னேற்றுவதற்காகவே தவிர, சங்கங்களின் உறுப்பினர்களின் நலனுக்கானவை அல்ல என்பது தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

பொதுச் சேவையில் எந்தவொரு பதவிக்கும் தேவையான அடிப்படைத் தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அடிப்படைத் தகமை, வேலையின் தன்மை, பொறுப்புக்கூறல், பொறுப்புகள் ஆகியவை சம்பளத்தை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அடிப்படைத் தகுதியை விட அதிக தகுதிகளைக் கொண்டிருப்பது, சம்பள உயர்வு விடயத்தில் தொடர்புடைய சேவையின் கடமைகளின் தன்மையை மாற்றாது. எனவே தேசிய வேதன கொள்கையினால் மட்டுமே பொதுச் சேவையின் திறமையை மேம்படுத்தவும், தொழில் வல்லுநர்களின் கௌரவத்தைப் பேணவும், நாட்டின் சுமையைக் குறைக்கவும் முடியும்.

அரசாங்கமும் எதிர்க்கட்சியும் தேசிய வேதனக் கொள்கையை அறிவியல் பூர்வமாக உருவாக்கிப் பாதுகாத்து, சரியான நபர்களை ஈர்த்தல், அவர்களை பொதுச் சேவையில் தக்கவைத்தல், அவர்களை முறையாக நியமித்தல், அவர்களிடம் இருந்து சரியான சேவையைப் பெறல் ஆகிய விடயங்களை வினைத்திறனாக முன்னெடுப்பதன் ஊடாகவே, பொதுச் சேவையை இன்னும் துடிப்புடன் வைத்திருக்க முடியும்.

எனவே அரசு ஊழியர்களின் சம்பளம் குறித்த முடிவு தேசிய சம்பள ஆணைக்குழு மூலம் முறையான அமைப்பு மற்றும் நிபுணர்களைக் கொண்டு எடுக்கப்பட வேண்டும். பொதுத் துறையில் சம்பளம் திருத்தம் (அதிகரிப்பு) மற்றும் இதர கொடுப்பனவுகள் கொள்கை கட்டமைப்பிற்குள் மேற்கொள்ளப்படும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

கொள்கை அடிப்படையிலான சம்பள போராட்டத்துக்கான காலம் உதயமாகியுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

# 'முக்காடு' சிறப்பு மலர் வெளியீடு





'முக்காடு' சிறப்பு மலர் வெளியீட்டு வைபவம், பிரதேச செயலாளர் வீ. தவராஜா தலைமையில் ஓட்டமாவடி தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் புதன்கிழமை (16) நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே. கருணாகரன், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம். நௌபர், சட்டத்தரணி யூ.எல். றிஸ்னா பர்வின் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், அதிகாரிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் 'முக்காடு' சிறப்பு மலரின் முதல் பிரதி, பிரதேச செயலாளர் வீ. தவராஜாவால் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரனுக்கு வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது. நூல் அறிமுகத்தை ஓய்வு நிலை ஆசிரியை பௌசியா கலீல் நிகழ்த்தினார்.

ஏ.எச்.ஏ. ஹுஸைன்









# தென்கிழக்கு பல்கலைக்கழக வெள்ளி விழா மலர்



தென்கிழக்குப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு 25 வருடங்கள் நிறைவுற்றதை ஒட்டிய நினைவு மலர் உபவேந்தரிடம் கையளிக்கும் நிகழ்வு, பல்கலைக்கழக உபவேந்தர் அலுவலகத்தில் உபவேந்தர் பேராசிரியர் அபூவக்கர் றமீஸ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில், நினைவு மலரின் பிரதம ஆசிரியரும் நூலகருமான எம்.எம். றிபாஉத்தீன், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தின் பீடாதிபதி எஸ்.எம்.எம். மஸாஹிர், பதிவாளர் எச். அப்துல் சத்தார் உள்ளடங்கலான நினைவு மலர் பதிப்புக் குழுவினர் கலந்துகொண்டனர். முதற் பிரதியை மலரின் பிரதம ஆசிரியர் எம்.எம். றிபாஉத்தீன் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசியர் அபூவக்கர் றமீஸுக்கு வழங்கிவைத்தார்.

நூருல் ஹுதா உமர்



# தொகை மதிப்பு ஓவியர்களுக்கு சான்றிதழ்கள்

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தால் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடத்தப்பட்ட 'தொகை மதிப்பு ஓவியர்' சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள், குறித்த பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேச செயலகங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் ஏ.பி. முஜீன் தலைமையில் நேற்றுமுன்தினம் (17) நடைபெற்றபோது, பதாகை வரைதல் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற உயர்தரப் பிரிவு மாணவர்களான என். ஹப்றின் ஹனா, ரி. இஸட். பாத்திமா பறாதிஸ், வை.எச். நுதைஸ் அஹமட் ஆகிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம் தமீம், பிரதி அதிபர் எம். இக்பால், இணைப்பாடவிதானத்துக்குப் பொறுப்பான உதவி அதிபர் ஏ.எல். சம்சுல் பளீல் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

–எம். ஏ. றமீஸ்



# சாதனைப் பெண்கள் 2022

நந்தவனம் பவுண்டேஷன், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, சாதனைப் பெண்கள் 2022 விருது வழங்கும் விழா, சனிக்கிழமை (12) காலை சென்னை விஜய் பார்க் ஹோட்டலில் நடைபெற்ற போது, சிறப்பு விருந்தினராக உதயன் வார இதழ் (கனடா) ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம், இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் ஆகியோருடன் விருது பெற்ற சாதனையாளர்களான வவுனியாவை சேர்ந்த சூரியாலினீ, மன்னாரை சேர்ந்த வெற்றிச்செல்வி சந்திரகலா, திருகோணமலையை சேர்ந்த சுஹாசினி பரசுராமன் ஆகியோருடன் நந்தவனம் பவுண்டேஷன் தலைவர் சந்திரசேகரன் காணப்படுகின்றார்.




# முகநூல் நேரலையில் உலக கவிதை தின நிகழ்வு

உலக கவிதை தினத்தை (மார்ச் 21) முன்னிட்டு ஸ்தாபக குழு இயக்கம் வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) நடத்தும் கருத்தரங்கம் உலக கவிதை வாசிப்பு மார்ச் 21 ஆம் திகதி அன்று மாலை 5.00 மணிக்கு முகநூல் நேரலையில் நடைபெறவுள்ளது. டொக்டர் தாஸிம் அஹமது தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், தொடக்கவுரையை மேமன்கவியும் 'உலக கவிதைகளின் வாசிப்பில்' என்ற தலைப்பில் முல்லை முஸ்ரிபாவும் 'ஈழத்து ஆங்கில கவிஞர் ஜீன் அரசநாயகமும் அவரது கவிதைகளும்' என்ற தலைப்பில் கெகிராவ ஸுலைஹாவும் 'ஈழத்து சிங்கள கவிஞர் ஜீ.பீ சேனநாயக்காவும் அவரது கவிதைகளும்' என்ற தலைப்பில் ஹேமச்சந்திர பதிரனவும் நிகழ்த்தவுள்ளனர்.



# பௌர்ணமி தின நிகழ்வும் நூல் வெளியீடும்



அன்புவழிபுரம் கலைக்குழுவின் ஏற்பாட்டில் பௌர்ணமி தினக் கலை நிகழ்வும் நூல் வெளியீடும் மதிப்பளித்தல் நிகழ்வும் கவிஞர் செ. ஞானராசா தலைமையில் வியாழக்கிழமை (17) திருகோணமலை அன்புவழிபுரம் அன்பு அறிவகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் எழுத்தாளர் சூசை எட்வேட்டின் 'இங்கு வீசியது ஒரு சமாதானக்காற்று' என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது. நூலின் முதல் பிரதியை அருட்தந்தை சூ. டக்ளஸ் ஜேம்ஸ் (பங்குத் தந்தை அன்புவழிபுரம்) பெற்றுக்கொண்டதுடன் நூல் மதிப்பீட்டை 'நீங்களும் எழுதலாம்' ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் வழங்கியதையடுத்து, நூலாசிரியர் இராஜேஸ்வரனால் மதிப்பளிக்கபட்டார் .

இலக்கிய ஆர்வலர் ஓய்வு பெற்ற அதிபர் சரோசா இராமநாதன், பிரதி அதிபர் ஞானராசா சுகிலாவால் மதிப்பளித்து பாராட்டப்பட்டார். தொடர்ந்து, வரலாற்று ஆய்வாளர் கலாநிதி க. சரவணபவனின் படைப்பாக்கம் பற்றிய மீள்பார்வை இடம்பெற்றது. தொடர்ந்து அன்புவழிபுரம் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் து. தனராஜாவால் மாணவர்கள், இளைஞர் படைப்பாக்கம் வாசிப்பு பற்றிய கலந்துரையாடலுடன் நூல்கள் பகிர்ந்தளிப்பும் நடைபெற்றன.

வடமலை ராஜ்குமார்






## மூதூர் டயமன் விசேட தேவையுடையோர் பாடசாலையின்

# ஆறாவது ஆண்டு நிறைவு விழா

திருகோணமலை, மூதூர் பிரதேச சபைக்கு உட்பட்ட டயமன் விசேட தேவையுடையோர் பாடசாலையின் ஆறாவது ஆண்டு நிறைவு விழா, பாடசாலையின் ஸ்தாபகரும் மூதூர் பிரதேச சபை உறுப்பினருமான பாடசாலை அதிபர் அகீதா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ரீ.எம் ஐய்யூப் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். மேலும் மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம் எம் ஏ அரூஸ், கிண்ணியா பிரதேச சபை உறுப்பினர் முக்தார், சட்டத்தரணி எம் ஹனான், ஓய்வுபெற்ற அதிபர் ம.ஃரூப், விசேட தேவையுடையோர்கள் பாடசாலையின் ஆசிரியர்களான நகோஸ்வரன் தக்சிகா, தமிழ் செல்வன் வினித்திரா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

நூருல் ஹுதா உமர்




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 19 மார்ச் 2022, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்படுகிறது.